

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 16ம் நாள் நிறைமதி (01-08-2023 செவ்வாய்க்கிழமை) வெளியீடு +94 21 221 2739

## சிவதீக்கை பெறவிரும்புவோர் தொடர்புகொள்ளவும்



ஆவணித் திங்கள் நடுப் பகுதியில் தென்னாடு சிவ மடத்தில் அருட்குருநாதர் ஒளியகம். ந.ஒளியரசு ஐயா வினால் சிவதீக்கை வழங் கப்படவுள்ளது. பெற விரும்பும் அடியவர்கள் தொடர்பு கொள்ளவும். (+94707701111)

# தமிழர் மரபுவழி தென்புலத்தார் வழிபாட்டில் ஆடி மறைமதி (அமாவாசை) இம்முறை ஆடி 30 (ஆக 15) - ஒசுத்திரேலியா ஆடி 31

### தந்தையை இழந்தவர்கள் கண்டிப்பாகப் பிடிக்கவேண்டிய விரதம்

மயங்காத் தமிழர் மரபிலே தொன்று தொட்டு மூத்தோர் வழிபாடுகள் மற்றும் நீத்தார் வழிபாடுகள் இரண்டறக்கலந்தவை ஆகும். பொதுவாக ஒவ்வொரு மறைமதி (அமாவாசை) தினங்களும் விரதத்திற்குரிய நாட்களாயினும் தை, ஆடி,மற்றும் புரட்டாதி மறைமதி (அமாவாசை) தினங்கள் தென்புலத்தார் பிதிர் வழிபாட்டிற்கு மிகவும் உகந்தவை ஆகும்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை - குறள் 43**


குறிப்பாக ஆடி மறைமதி அன்று, தந்தையை இழந்தவர்கள் நோன்பிருந்து மனம், மொழி, மெய்களால், வினைகளை அறுத்து வீடுபேறு வழங்கும் ஒரேயொரு கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டு உங்கள் தந்தைக்கும், முன்னோருக்கும் மீண்டும் பிறப்பில்லாத பேரின்பப் பெருவாழ்வு கிடைக்கவேண்டுமென்று விண்ணப்பம் வைத்து நெய் விளக்கேற்றி வழிபடவேண்டும். ஏற்கனவே அவர்கள் பிறப்பினை எடுத்திருந்தால் இப்பூவுலக வாழ்வில் வாழ்வாங்கு வாழ்வதற்கு பொருளும், பிணிகள் அற்ற வாழ்வும் பின்னர் அருளும் வழங்கி பிறவிப்பிணியையும் நீக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுங்கள்.

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு - குறள் 247**


இத்தினத்திலே அதிகாலை எழுந்து, புனித தீர்த்தங்களில் அல்லது கிணற்றடி நீரில் ஓம் நமசிவாய என்ற மந்திரத்தினை உச்சரித்தபடி நீராடி, சிவனை வழிபட்டு, மூத்தோரின், தந்தையின் படம் வைத்து, நெய் விளக்கேற்றி அவர்களுக்கு எள்ளும் தண்ணியும் இறைத்து பிதிர் வழிபாடு ஆற்றி, பலவகையான மரக்கறிகளுடன் நிறைவான அறுசுவை உணவுகளை வீட்டில் தாயார் செய்து, சிவனுக்கும் அவர்களுக்கும் படையல் செய்து, சிவபுராணம் பாடி, பிற உயிர்களுக்கும் உணவளித்து, அன்னதானம் இட்டு, நீங்களும் குடும்பமாக இருந்து உணவினை உட்கொண்டு நிறைவு செய்யலாம். நீத்தாருக்கு முத்தி வேண்டி அச்சோப் பதிகத்தினையும் ஓதுங்கள்.

### மணிவாசகரின் திருவாசகம் - அச்சோப் பதிகம்

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறு யார்பெறுவார் அச்சோவே**



## மயங்கா மரபுத் தமிழர்களின் ஆதீனங்கள் எனும் தத்துவப் பல்கலைக்கழகங்கள்



கோயில்களும் திருமுறைகளும் பின்னிப் பிணைந்துள்ளன. அதுபோல் மடங்கள் அல்லது ஆதீனங்களும் சாத்திரங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. நாம் கோயில்களில் காட்டும் அதே அளவு அக்கறை ஆதீனங்களிலும் காட்டவேண்டும். குறிப்பாக இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளில் இயங்குநிலையில் உள்ள ஆதீனங்கள் மிகக்குறைவு. ஏன் இல்லையென்றே கூறலாம். ஆதீனம் அல்லது மடம் என்றால், நிச்சயமாக மடாதிபதி அல்லது துறவி இருக்கவேண்டும் என்று எண்ணவேண்டாம். பண்டு நால்வருக்கு அறமுரைத் தருளிய நாதனாரைக் குருவாகவும், அவர் அருள்பெற்று, வழி வழிவந்த சந்தான மரபினரின் சாத்திர நூல்களைக் கருவாகவும் கொண்டு நிச்சயமாக மடங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் மற்றும் மேலோங்கவேண்டும். இந்த மடங்கள் ஊடாக அடுத்த தலைமுறையினருக்கு, திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் ஊடுகடத்தப் படவேண்டும்.

அத்துடன் இயங்கு நிலையில் உள்ள மடங்கள், திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் முதன்மையாகக் கொண்டு இயங்குவது மட்டுமல்லாது அவற்றை மேன்மைப்படுத்தி, விரிவுபடுத்த அல்லும் பகலும் உழைக்கவேண்டும். மடங்களே மயங்காத் தமிழர் மரபின் கடத்தியாக இருக்கவேண்டும். ஆகவே கோயில்களைப் போல் மடங்களும் போற்றப்படவேண்டும்.

# நகுலேச்சரக் குருக்கள் சைவத்தின் ஒரு வரலாறு

சிவபூமியாம் இலங்கையின் ஐம்பெரும் ஈச்சரங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேச்சரம் திருக்கோயிலின் ஆதீன முதல்வரும் முதன்மை பூசகருமான இராசராச ஸ்ரீ கு. நகுலேச்சரக் குருக்கள், கடந்த ஆனித் திங்கள் 30ம் நாள் (15-07-2023) பதின்மும்மை பிறைநாளன்று தனது 98வது வயதில் சிவனடியை சேர்ந்தார்.

இவரின் வாழ்நாள் சேவையானது போற்றுதலுக்குரியதாகும். இன்று எழில்மிகு கோபுரங்களுடன் தலைநிமிர்ந்து நிற்கும் கீரிமலை நகுலேச்சரம் திருக்கோயிலின் நிலைப்புத் தன்மைக்கு ஊன்றுகோல் நகுலேச்சரக் குருக்களே என்று கூறினால் மிகையாகாது. குறிப்பாக, உள்நாட்டு யுத்தம் காரணமாக பல வருடங்கள் பூசை வழிபாடுகள் இன்றி அழிவடைந்த நிலையில் காணப்பட்ட திருக்கோயிலை, நகுலேச்சரக் குருக்களின் அயராத முயற்சியினால் 2009ம் ஆண்டு முதல் கோயிலுக்கு சென்றுவர அடியவர்களுக்கு அனுமதி வாங்கி கொடுக்கப்பட்டது என்பது நினைவு கூறப்படவேண்டியதாகும்.



மேலும் இவரின் இறைத்தொண்டிற்கு சான்றாக திருக்கைலாயப்பரம்பரைத்தருமை ஆதீனத்தின் நட்சத்திர குருமணிகள், சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் சிறப்புக் கௌரவத்துடன் “சிவாகம கலாநிதி” எனும் சிறப்பு பட்டம் தருமையாதீனத்தினால் நகுலேச்சர ஆதீன முதல்வர் இராசராச ஸ்ரீ கு. நகுலேச்சரக் குருக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மற்றும் இந்திய துணைத்துதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனால் இந்த விருதுக்கான பட்டயமும் தங்கப்பதக்கங்களும், பொற்கிளியும் நகுலேச்சரக் குருக்களுக்கு அவரது இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 2012 ஆம் ஆண்டு தைத் திங்களில் நகுலேச்சரக் குருக்கள் தலைமையில் திருக்கோயில் திருக்குட நீராட்டு இடம்பெற்றமையும் இறையருளாகும்.

வையத்துள் சைவம் தழைக்க வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்துள்ள, பெருமகனாரின் ஆன்மா சிவபெருமானின் திருவடிகளை பற்றி, மீண்டும் பிறப்பில்லா பெருவாழ்வை பெற்று உய்திட தென்னாடு அருள்மிகு மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருவருள் புரிவாராக. - ஓம் நமசிவாய

**“சிவசிவ என்றிட சிவகதி தானே! “**

**திருச்சிற்றம்பலம்**

# அப்பர் பெருமானுக்கு திருக்கயிலாயக் காட்சிப் பெருவிழா (மாபெரும் திருமுறை சேர்ந்திசை நிகழ்வு - 2023)



தருமை ஆதீனத்தின் ஏற்பட்டில் அப்பர் பெருமானுக்கு திருக்கயிலாயக் காட்சிப் பெருவிழாவானது, திருவையாற்றில் அருள்மிகு ஐயாறப்பர் திருமுன்னரில், வருகின்ற ஆடித் திங்கள் 31ம் நாள் (16-08-2023) **ஆடி மறைமதி** நாளன்று மாலை 6 மணியளவில் இடம்பெற வுள்ளது.

தருமை ஆதீனம் 27வது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாணையின் வண்ணம் நடைபெற உள்ள இந்நிகழ்வில், அன்பர்கள் அனைவரும் திருக்கயிலாயத் திருப்பதிகங்களை இசையோடு பாடுகின்ற அரிய வாய்ப்பினை வழங்கி அருளியுள்ளார்கள். அவ்வண்ணம் உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள திருமுறைப் பண்ணிசை பயிலும் இருபாலருள்ளும் மூத்தோர், இளையோர் சிறார், சிறுமிகள் அனைவரும் பங்கேற்றுப் பாடலாம். முன்பதிவு செய்வது அவசியம். முன்பதிவு செய்வோர்க்கு அடையாள அட்டை வழங்கப்படும். உள்நாடு, வெளிநாடு அன்பர்கள் அனைவரும் இணையதள நேரலையிலும் கண்டு மகிழலாம். சேர்ந்திசையில் பாடுவதற்கு உடனே இணையதள வழியாக அனைவரும் தருமையாதீன வலைதளத்தில் முன்பதிவு செய்யுங்கள்.

**கயிலை மலையானே போற்றி போற்றி**

**திருச்சிற்றம்பலம்**

# மூதூர் கட்டைப்பறிச்சான் விபுலானந்தா வித்தியாலயத்தில் சுந்தரர் குருபூசை





எம் சைவ சமயகுரவர்களான நால்வர் பெருமக்கள் போற்றி வழிபட வேண்டியவர்கள். அவர்களின் நால்வகை நெறிகளையும், அருட்தொண்டுகளையும் நாம் போற்றி, அவர்கள் அருளிச் செய்த திருமுறைகளை எம் இளம் சமுதாயத்தினரிடையே கொண்டு செல்ல வேண்டி நாம் கடமைப்பட்டுள்ளோம். அந்த வகையில் நால்வர் வழிபாட்டை பாடசாலைகளில் ஊக்கப் படுத்திடும் நோக்கில் தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் செயற்பட்டு வருகின்றது.

அதன் ஓர் கட்டமாக தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் ஏற்பட்டில், திருகோணமலை / மூதூர் கட்டைப்பறிச்சான் விபுலானந்தா வித்தியாலயத்தில், ஆடிச் சுவாதி நன்நாளிலே சுந்தர் குருபூசை விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவை பாடசாலை இந்து மாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் பாடசாலை அதிபர் சிவத்திரு. யோகேஸ்வரன் அவர்கள் முன்னெடுத்து சிறப்பாக நடத்தியிருந்தார்.

இந்நிகழ்வில் பூசை வழிபாடுகளை சிவத்திரு. செ. கனகநாயகம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்கள் ஆற்றி வைத்தார். இங்கு பாடசாலை அதிபர் அவர்கள் நந்திக்கொடியை ஏற்றி வைக்க, மூதூர் வலயக்கல்வி இந்துசமய ஆசிரிய ஆலோசகர் திருமதி. வசந்தி நிமலன் அவர்கள் சுந்தரர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வழிபாடு செய்திருந்தார். மேலும் பாமகள் வித்தியாலய அதிபர் சிவத்திரு. அ. வில்வராஜா அவர்கள் சிறப்பு சொற்பொழிவையும் ஆற்றி யிருந்தார்.

இவ்வாறு சைவ பாடசாலைகளில் நாயன்மார் குருபூசைகள் கொண்டாடப்படவேண்டும். சைவ மரபில் எங்கள் இளம் செல்வங்களை வளர்ப்பது, எங்கள் பண்பாட்டினை வேரூன்றச் செய்யும். இதன் அடிப்படையில் நாயன்மார்கள், சந்தான குரவர்கள் மற்றும் சித்தர்கள் (இலங்கையில் ஈழத்து சித்தர்கள்) குருபூசைகளை கொண்டாடப்படவேண்டும். பாடசாலைகளில் நால்வரின் குருபூசைகளாவது கொண்டாடப்படவேண்டும்.

**திருச்சிற்றம்பலம்**

# "இல்லங்களில் சிவபூசை செய்வோம்" நூல் வெளியிடப்படவுள்ளது

இல்லங்களில் அனைவரும் சிவ வழிபாடு செய்து பயன்பெறவேண்டும் என்னும் நோக்கில், **"இல்லங்களில் சிவபூசை செய்வோம்"** நூல், இலங்கை சைவநெறிக் கழகத்தினால் வெளி யீடுசெய்யப்படவுள்ளது. இவ்வெளி யீடு, வருகின்ற 29ம் திகதி சனிக் கிழமையன்று நாவலப்பிட்டி குயின்ஸ்பேரி நவநாதசித்தர் சமாதி சிவன் திருக்கோயிலில் நடை பெறவுள்ளதுடன், அறநெறிப் பாட சாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்படவும் உள்ளது சிறப் பம்சமாகும்.

மேலும் தமிழ்நாடு புனிதர் பேரவையும் இலங்கை சைவநெறிக் கழகமும் இணைந்து வெளியிடும், சிவத்திரு.செ.முருகவேள் பெருமகனார் எழுதிய தமிழ்மொழி பெயர்ப்பும் குறிப்புரை விளக்கவுரைகளுடனும் கூடியதுமான **"இரௌரவ ஆகம வித்யாபாதம் நூல்"**, சுந்தரமூர்த்தி நாயனார் பெருமானின் குருபூசை நன்னாளாகிய ஆடிச்சுவாதி நன் நாளில், திருவாவடுதுறை ஆதீன குரு மகாசந்நிதானம் பெருமானாரால் வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

**திருச்சிற்றம்பலம்**


தென்னாடு
www.thennadu.org


சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org

# புலம்பெயர் தமிழரின் பண்பாட்டு எதிர்காலம்

இலங்கைத் தமிழர்கள் அன்று தொட்டு இன்று வரை பிறநாடுகளுக்கு சென்று குடியேறுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றனர். இது போரின் விளைவால் தொடங்கினாலும் அது இன்னும் தொடர்கின்றதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அந்தவகையில் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ஐரோப்பா நாடுகள், ஒசுத்திரேலியா, நியூசிலாந்து போன்ற பல நாடுகளில் சென்று குடியேறி வாழ்ந்து வருகின்றனர். அண்ணளவாக ஒரு மில்லியனைத் தாண்டிய இந்த புலம்பெயர் தமிழரின் பண் பாட்டு எதிர்காலம் பற்றி நாங்கள் நிச்சயம் சிந்திக்கவேண்டும். பேச்சிலே மட்டும் தமிழ் தேசியத்துடன் நின்றுவிடாது வாழ்விலும் தமிழ் பண்பாட்டினை உள்வாங்கவும் மற்றும் அடுத்த தலைமுறைக்கு அதனை ஊடுகடத்த என்ன செய்கிறார்கள், செய்யவேண்டும் என்று சற்று சிந்திப்போம்.

புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டியிருக்கிறார்கள். மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்பது போல் இது ஒரு நல்லவிடயமே. ஆனால் இந்தக் கோயில்களில் அதிகாரப் போட்டியினால் குழுக்களாகப் பிரிந்து நிர்வாகம் நிலைகுலையும் கோயில்களே ஏராளம். இந்த வகையில், கோயில்கள் கிரிகைகள் வழியில் மக்களை ஈர்த்தாலும் அதன்வழி வருமானத்தினை ஈட்டுவதே முழுமையான நோக்கமாக இருக்கிறது. பொன்னும் பொருளும் தேவைதான் ஆனால் அவற்றை வைத்து எங்கள் பண்பாடு, சமய வளர்ச்சிக்கு என்ன செய்கிறார்கள் என்ற கேள்வியும் எழுகின்றது. மேலாக அடுத்த தலைமுறை இளையவர்களை எப்படி உள்வாங்கு கிறார்கள் என்ற எண்ணமே எல்லாவற்றிக்கும் மேலாக உள்ளது.

ஒரு பண்பாட்டின் அடிப்படை மொழியாக இருந்தாலும், அதனைத் தாண்டியும் பல பண்பாட்டுக்கூறுகள் வாழ்வியலில் இடம்பிடிக்க செய்கின்றன. தமிழ் மொழி வளர்ச்சிக்கு தமிழ் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. ஆனால் எத்தனை மாண வர்கள் இதனூடு பயன்பெறுகின்றனர் என்பது கேள்விக்குறியே. ஆகவே அவர்கள் விளங்கக் கூடிய மொழியிலும், எங்கள் மொழியின், பண்பாட்டின் பெருமைகளை எடுத்துச்செல்வது இன்றியமையாததே. அத்துடன் மொழி, பண்பாடு,வானியல், அறிவியல், விஞ்ஞானம், மெய்ஞானம், நெறிமுறை, வாழ்வியல் அறம், பண்டை இலக்கியம், பத்தி இலக்கியம், மேலாக மயங்கா மரபுத் தமிழர்களின் தத்துவமாகிய சைவ சித்தாந்தம் போன்றவற்றை அவர்களுக்கு விளங்கக்கூடிய மொழியில் அறிய வைக்கவேண்டும்.

இலங்கையில் பல சைவப் பணிகளை செய்துவரும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், புலம்பெயர் நாட்டு இளையோருக்கும் சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இதன் அடிப்படியில் சிட்னியில் சைவ மாணவர் சபை எனும் இளையோர் அமைப்பு தொடங்கப்பட்டது. அத்துடன் அவர்களுக்கு சைவ சித்தாந்த வகுப்புகள், சைவ சிந்தாந்த கேள்வி பதில்கள் போன்ற உரையாடல்களை நடத்திவருகிறது.

இதன் அடிப்படையில், மூன்று ஆண்டு காலமாக வெளிவரும் தென்னாடு தெய்வத்தமிழ் இதழில், சைவ சமயம் தொடர்பான கட்டுரைகள், தத்துவங்களை, தேவாரங்களை ஆங்கில மொழிமூலம் அறிமுகப்படுத்தலாம் என்ற எண்ணவெளிப்பாட்டின் விளைவாக இம்முறையில் இருந்து நான்கு ஆங்கிலப் பக்கங்களை அறிமுகம் செய்கிறோம். புலம்பெயர் தமிழர்கள் மட்டுமல்ல தமிழ் தெரியாதவர்கள், சைவத்தினைப் பற்றிய வரலாற்று உண்மைகளை, அற்புதங்களை வாசித்து அறிந்துகொள்ள உறுதுணையாகவிருக்கும். இந்த வெளியீட்டிற்கு உறுதுணையாக இருக்கும் அனைத்து உறவுகளுக்கும் மனமார்ந்த நன்றிகள், குறிப்பாக தென்னாடு இதழை இலங்கைக்கு வெளியே அச்சிட்டு வெளிட உதவும் வணிக நிறுவங்களுக்கும் எங்கள் நிறைவான நன்றிகள்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# இருபது ஆண்டுகளை நிறைவு செய்தது சிவபூமி மனவிருத்தி பாடசாலை



சமூகத்தின் தேவைகளை உணர்ந்து தன் செயற்பாடுகளை முன்னெடுக்கும், சிவபூமி அறக் கட்டளையின், காலத்துக்கு உகந்த பெரும் பணியாக விளங்கும் ‘சிறுவர் மனவிருத்திப்பாடசாலை’ தனது இருபதாவது ஆண்டை நிறைவு செய்துள்ளது. கோண்டாவிலில் ஆரம்பிக்கப்பட்ட இச் சிறுவர் மன விருத்திப்பாடசாலை, பிறவியிலே சிந்தனை ஆற்றல் குறைந்த, மனவளம் பாதிப்படைந்த மாணவர்களை உள்வாங்கி சமூகத்தில் அவர்களுக் கும் கௌரவத்தையும் சகவாழ்வை யும் கொடுப்பதற்காக, தன்னால் இயன்ற பெரும் பங்களிப்பை நல்கி வருகின்றது.

செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்களின் சிந்தனையில் உருவான இப்பாடசாலை, இந்த மண்ணில் பிறக்கும் விசேட தேவையுடைய பிள்ளைகள் சமூகத்தால் ஒதுக்கப்படுவதை தவிர்த்து, சர்வதேச அளவில் அவரை சாதனையாளராக உருவாக்கியுள்ளது. சமயம் சார்ந்த பணிகளை முன்னெடுக்கும், அதற்கு சமாந்தரமாக சமூகப்பணிகளை, சமயங்களை கடந்த நிலையில் நின்று ஆற்றிவருகின்றமையை நாங்கள் அறிவோம். சமூக சமயப் பணிகளோடு, உளவள ஆற்றுப்படுத்துகைப் பணியாகவும், சிவபூமி மனவிருத்திப் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையுடன் இருபது ஆண்டுகளாக முன்னெடுத்துப் பெருஞ்சாதனை புரிந்துள்ளார் கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்கள் என்றால் அது மிகையன்று. மணவர்களுக் கான போக்குவரத்து, உணவு, இன்ன பிற உதவிகள் என்று இலவசமாக வழங்கப்படும் இச் சேவை உயர்ந்தது.



இலங்கை அரசினால் சிறந்த சமூகநலச் சேவைக்காக வழங் கப்படும் உயர் விருதான, “சுப அபிமானி” விருதினைப் பெற்றுக் கொண்ட இப்பாட சாலை இலங்கையில் முதன் நிலையில் மனவிருத்திக் கல்வியையும் தொழிற்கல்வியையும் இணைந்து வழங்கும் பாடசாலை எனும் பெருமைக்கும் உரியது. சர்வதேச அளவில் இடம் பெற்ற விசேட ஒலிம்பிக் போட்டியில் கிறிஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்ற சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள் சாதனைபடைத்துப் பதக்கங்களுடன் நாடு திரும்பி பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர். சிவபூமி, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களிலும் விரிவாக்கம் செய்து முனைப்போடு பணி செய்வது, மகத்தான சேவையாகும். ஈழத்தமிழர்களாகிய நாம் எல்லோரும் எம் ஆதரவை வழங்கி, தொடர்ந்து இப் பணி உயரவும், குழந்தைகளாக பிறந்து, குழந்தைகளாகவே வளர்ந்து குழந்தைகளாகவே பிரியும் மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளின் வாழ்வில் ஒளியேற்ற முன்வருவோம்.

கடந்த **03-07-2023** அன்று இப்பாடசாலையின் இருபதாவது ஆண்டு நிறைவு விழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில், கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் தலைமையில், பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள வைத்தியகலாநிதி.வை.மனமோகன் தம்பதிகள் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ள, ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளுடைய ஆசியுடன் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**திருச்சிற்றம்பலம்**

**தொகுப்பு - சிவ. செந்தமிழாதன்**




**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



## எம் நெறி நிற்போம்!

உலகம் எங்கும் ஈழத்தமிழர்கள் பரந்து வாழ்வதற்கும், அவர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் உயர்பதவிகள் வகிப்பதற்கும் மதிப்புற்று விளங்குவதற்கும், தமிழர் பண்பாட்டு விழுமியங்களே காரணமாகும். சீன தேசத்தவர்களது பண்பாட்டை வெள்ளைக்காரர்கள் பின்பற்ற முடியாது. வெள்ளைக்காரரது பண்பாட்டை மொங்கோலியர் பின்பற்ற முடியாது. ஆனால் தமிழர்களுடைய பண்பாட்டை எந்த இனத்தவரும் ஏற்று ஒழுகலாம், ஏனெனில் அது ஒழுக்க நெறிமுறைகள் சார்ந்த உலக ஒற்றுமைக்கும், சமத்துவத்துக்கும் அடிப்படையாக அமைந்த, வாழ்வியல் கோலங்களையும் கொண்ட பண்பாடாகும். இதன் காரணத்தால் தான் எம் சடங்குகள் மீதும், வழிபாடுகள் மீதும் ஈர்ப்புக் கொண்டு, பல் தேசத்தவர்களும் தமிழர் பண்பாட்டை ஒழுகியது மட்டுமல்லாமல் ஆய்வு செய்தும் அதன் அருமை பெருமைகளை போற்றினர். திருவாசகத்தையும் திருக்குறளையும் தம் தலைமேற் சூடிய வெளிநாட்டு அறிஞர்கள் பட்டியல் நீளமானது. எமது சமய சமூக வாழ்வியல் கோலங்களில் தம்மை ஈடுபடுத்தி வாழ்ந்துவரும் பிறதேசத்தவர்களும் ஏராளம்.

“நமக்குள்ளே மறைவாகப் பழங்கதைகள் பேசாமல், பிற நாட்டார் அதை வணங்க வைக்க வேண்டும்” என்ற பாரதியின் பெருங்கனவை இன்று நாம் ஓரளவு நனவாக்கியுள்ளோம் என்று கூறினால் அது மிகையல்ல. ஆனால் தமிழர்களின் செல்நெறி எப்படி சமகாலத்தில் இருக்கின்றது என்ற கேள்வியும் முன்வைக்கப்படவேண்டியதே. ஏனெனில் தேசங்கள் அனைத்திற்கும் சென்ற தமிழர்கள் தம் பண்பாட்டை அத் தேசத்தவர்களிற்கு அறிமுகம் செய்து வைத்ததோடு மட்டுமன்றி, அத் தேசத்தவர்களது பண்பாட்டில் சிலவற்றை தாம் எடுத்தும் கொண்டுள்ளனர். நன்மையானவற்றைப் பெறுவது தவறன்று ஆனால் தவறானவற்றைப் பெறுவது எம் தலைமுறைகளுக்கு நன்மையன்று என்பதை விளங்கி கொள்ள வேண்டும். யாவரும் பின்பற்றதக்க மகத்தான மாண்புடைய ஒழுக்கவியலை கொண்ட நாம், எம் அடுத்த தலைமுறை அருவெறுக்கத் தக்க வழக்கங்களை பின்பற்றி ஒழுக அனுமதிக்க கூடாது. தனித்துவமான எம் வாழ்க்கை நெறிகளை, நவீனத்துவம், முற்போக்கு, பெண்ணியம் என்ற புரிதல் இல்லாத கருத்தியல் போர்வைகளால் மூடி அழிவைத்தரும் வழக்காறுகளை ஏற்று ஒழுக நாம் தலைப்படக் கூடாது.

நல்லூர் பெருந்திருவிழாக்கள் ஆரம்பமாகும் இக்காலத்தில் புலம்பெயர் தேசங்களில் இருந்து பெருமளவில் தாயகம் திரும்பும் நம் உறவுகள் பழமை மாறாத பண்பாட்டை பேண வேண்டும். தம்மோடு அழைத்துவரும் தம் பிள்ளைகளுக்கும் எம் உயர் பண்பாட்டை விளக்கிச் சொல்வதோடு அதனை பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகளை தெளிவுபடுத்த வேண்டும்.

எப்படி நல்லூர் கோயிலினுள் கலாசார உடைகளோடு செல்ல வேண்டுமோ, அப்படி பிற கோயில்களிற்கும் நாம் செல்ல வேண்டும். கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வில்லை என்பதற்காக கட்டறுந்த தனமாக நாம் செயற்படக்கூடாது. விதிகள், நெறிகள் எம்மை காத்து நிற்கும் வேலிகள் என அறிவோம். புலம் பெயர்வு உடலால் எம்மை பிரித்திருந்தாலும், உள்ளத்தால் இந்த மண்ணோடும், இதன் மாண்புறு கோலங்களோடும் பிணைந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழன் எங்கு வாழினும் தமிழனே, சைவத்தின் நெறியில் நிற்கும் அவன் வாழ்வியல் எப்போதும் மாற்றமுடியாது என்பதை, பிறதேசத்தவர்களும் உணரும்படி சொல்லிலும் செயலிலும் காட்டும் தருணம் இதுவே!

**எல்லை கடந்து ஓடி**
**ஏதோ தேசங்களில் வாழ்ந்தாலும்**
**தொல்லை இல்லை இனிஎங்கும்**
**இன் தமிழ் மரபே சிறக்க**
**இறைவா! நீ அருள் கண் திறக்காய்!**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு.யாழவன் சிவவேதன்,**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



## கந்தபுராண கலாசாரம் எங்கே?

திருவிழாக் காண தயாராகிக் கொண்டிருக்கும் நல்லைக் கந்தப் பெருமானின் கோயிற்சூழலும், அப்பெருமானின் அருட்பார்வையைப் பெறுவதற்காக தயாராகும் அடியார்களின் உளச்சூழலும் கந்தபுராண வாசனையை திசையெங்கும் ததும்ப விட்டுக்கொண்டிருக்கின்றன.

கந்தப் பெருமானின் அருள் ஒளி வீசுகின்ற மலேசியாவில் 11 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அண்மையில் நடைபெற்று முடிந்திருக்கின்றது. இந்த இடத்திலே தான் சிந்திக்க வேண்டிய விடயம் ஒன்று தொக்கி நிற்கின்றது. கந்தபுராண கலாசார பூமி என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் யாழ் மண்ணிடம் தற்போது கந்தபுராணம் பற்றிய எந்தவொரு தெளிவும் இல்லையென்பது தான். கந்தபுராண மூல நூலை யாழ்ப்பாணத்தில் காணுதல் அரிதிலும் அரிதாய் போய் விட்டது. சில நூலகங்களில் மாத்திரம், அதுவும் செல்லரித்துப்போன பிரதிகளையே காண முடிகிறது. எத்தனையோ ஈழத்துப் புலவர்கள் உரையெழுதிச் சேர்த்த அப்புராணம் இன்று உரையே இன்றிக் கிடக்கின்றது.

கந்தபுராணம் என்று யாழ்ப்பாணத்து நூல் விற்பனை நிலையங்களில் கேட்டால் அம்புலி மாமா கதைப்புத்தகம் போன்ற கதைப்புத்தக வடிவில் தான் கிடைக்கின்றது. அது கூட ஒரு சில இடங்களில் மட்டும் தான். இந்த நிலையில் நாம் மூச்சுக்கு மூவாயிரம் தடவை கந்தபுராணம், கந்தபுராண கலாசாரம் என்று பேசிக்கொண்டு இருக்கின்றோம்.

சைவசித்தாந்தப் பொருளை உட்கிடக்கையாகக் கொண்டு ஆறுமுகச் சிவபெருமானின் திருவரலாறு பற்றிப் பேசும் அந்த ஒப்பற்ற நூலை நாம் தொலைத்து விட்டு, புறச்சமயக் காப்பியங்கள் மிகுந்து விட்டன என்று பேசுவதில் எந்தவொரு அர்த்தமும் இல்லை. நல்லைக் கந்தனின் திருவிழாக் காலங்களில் கந்தப்புராணம் சார் நிகழ்வுகள் பல்வேறு அமைப்பினர்களால் முன்னெடுக்கப்படுவது வழமை. இனி வரும் காலங்களில் அதன் வீரியமும், வேகமும் கூட்டப்பட வேண்டியது காலத்தின் தேவை.

கந்தபுராணம் சார் மாநாடுகள் ஏற்படுத்தப்பட்டு, அது தொடர்பான தெளிவு உருவாக்கப்பட்டு, தெளிவின்மை நீக்கப்பட்டு மக்களிடம் உரிய முறையில் சென்று சேர வேண்டும். கந்தபுராண உரை நூல்கள், மூல நூல் என்பன பதிப்பிக்கப்பட்டு, அவை முறையாக மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட வேண்டும். அத்தோடு கந்தபுராணம் சார் சொற்பொழிவுகள், பட்டிமண்டபங்கள் நிகழ்த்தப்பட வேண்டும். இப்படியான செயற்பாடுகள் மாத்திரமே கந்தபுராணத்தையும், கந்தபுராண கலாசாரத்தையும் மீளவும் மீட்டு அளிக்கும். நல்லைக்கந்தனின் அருள் ஒளி எல்லோருக்கும் கிடைப்பதாக.

**வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.** - கந்தபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்

**(1) மானிடரை கடவுளாகவும், குருவாகவும் பாவித்து அவர்களுக்கு ஆகம விதிப்படி கோயில் கட்டலாமா ? அது ஏற்றுக்கொள்ளக்கூடியதா?**

சிவாகமங்களுள் சிவபத்தப் பிரதிட்டை குறித்து பூர்வகாரணாகமம், உத்தர காரணாகமம், உத்திரகாமிக ஆகமம், அஜிதாகமம், அசிந்திய விசுவசாதாக்யம் என்பன கூறுகின்றன. வாகமங்கள் குறிப்பிடும் சிவனடியார் இலக்கணத்தினை நாம் தேடிப்பார்க்கவேண்டிய இடம் பெரியபுராணமேயாகும். சிவனடியார் இலக்கணத்தில் நமக்குத் தெளிவு இல்லையென்றால் சிவபாதகர்களினையும் சிவபத்தர் என்று கொண்டு உழலும் நிலை உருவாகும். எனவே, பெரியபுராணம் கூறும் சிவனடியார் இலக்கணத்தினை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும்.

பெரியபுராணத்தில் தெய்வச்சேக்கிழார் பெருமான், சிவனடியார்களின் இலக்கணத்தினை ஏராளமான இடங்களில் அருளிச்செய்துள்ளபோதும் ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பதுபோல், ஒருசிலவற்றினை நாம் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

**1) மாசு இலாத மணிதிகழ் மேனிமேல்**
**பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள் (141)**
**2) பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்**
**மாது ஓர்பாகர் மலர்த்தாள் மறப்பு இலார் (142)**
**3) ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே**
**பாரம் ஈசன் பணி அலது ஒன்று இலார் ( 144)**
**4) பூதி கோவணம் சாதனத்தால் பொலிந்து**
**ஆதிதேவர் தம் அஞ்செழுத்தாம் அவை**
**ஓத நாவணக்கத்தால் உரைப்பவர் - (1706 )**

திருநீறு அணிந்திருப்பார்கள். திருநீறு சிவசம்பந்தமானதென்று தெளிந்து மாதொருபாகராகிய சிவபெருமானின் திருவடிகளினை மறக்காது விளங்குவர். மாலையாக உருத்திராக்கம் அணிந்திருப்பர். திருவைந்தெழுத்தினையே ஓதி வாழ்வர். சிவபெருமானுக்கு பணிசெய்வதே தம்கடன் என்று வாழ்ந்திருப்பர்.

அப்பர் பெருமான் ''சிவன் எனும் ஓசை அல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மை யுளதே'' என்று அருளிச்செய்துள்ளார். சிவன் என்னும் ஓசை ஒன்றுக்கே திருவருட்செம்மை உண்டு என்பது அப்பர்சுவாமிகள் அருள்வாக்கு. எனவே, சிவ ஓசையினையே காதினால் கேட்கும் பேறு வாய்க்காதவர், சிவநாம ஓசையினை வாழ்நாளில் ஒருபோதும் ஓதி இன்புறாதவர் ஒருபோதும் சிவபத்தரல்லர்.

**2) பௌத்தமதத்தில் இருந்த சாக்கிய நாயனாரினை நாயனாராகக் கொண்டாடுவதுபோல், பிறமத ஆச்சாரியர்களினைச் சைவசமயத்தார் கொண்டாடலாமா? இது சைவசமயத்திற்கு ஏற்புடைய கருத்தா?**

சைவநெறியே மெய்நெறி என்றும், சிவபெருமானே பரம்பொருள் என்றும் சாக்கியநாயனார் உணர்ந்து சிவபெருமான்பால் அன்பு மீதூறப்பெற்று விளங்கியவர் என்பது தெய்வச்சேக்கிழார் சைவசமயத்தாருக்கு உணர்த்தும் பாடம்.

**செய்வினையும் செய்வானும்**
**அதன்பயனும் கொடுப்பானும்**
**மெய்வகையால் நான்காகும்**
**விதித்தபொருள் எனக்கொண்டே**
**இவ்வியல்பு சைவநெறி**
**அல்லவற்றுக்கு இல்லை என**
**உய்வகையால் பொருள் சிவன் என்று**
**அருளாலே உணர்ந்து அறிந்தார்**
- பெரிய புராணம் (சாக்கியநாயனார் புராணம்)

சிவபெருமானே பொருள் என்று தெளிந்து சிவபெருமானையே வழிபடுகின்றவர்களுக்கு வேடக்குறைவும் ஒரு பொருட்டன்று என்பதுதான் சாக்கியநாயனார் புராணம் உணர்த்தும் பாடம். சிவசின்னங்களினால் உடலினைப் பொலிவுசெய்திருப்பது அவசியமேயெனினும்,அதனிலும் தேவையானது சிவபெருமான்பால் கொள்ளும் அன்பே என்பதுதான் இங்கு நாம் உணரவேண்டியதாகும்.

**3) சூரபத்பன் முதலிய அசூரர்கள் எல்லாம் சிவவழிபாடே செய்தனர். அவர்களை வழிபடலாமா?**

சூரபத்மனாதியோர் செய்த வழிபாடெல்லாம் ''நானே கடவுள்'' என்னும் நிலையினதாயின! அதாவது சுக்கிராச்சாரியரால் '' ஏகன்மவாதக் கொள்கை'' போதிக்கப்பட்டு, அக்கொள்கை உடையவராயினர். அக்கொள்கையினைப் பூமியில் போதித்தவர் ஆதிசங்கரராவார். அவருடைய போதனையினைக் கொண்டு இயங்கும் மதம் ஏகான்மவாதமதம் என்றும், சுமார்த்தமதம் என்றும் சங்கராச்சாரியமதம் என்றும் கூறப்படும். சைவசமயம் கூறும் சிவோகம்பாவனை என்பது, சார்ந்ததன் வண்ணமாதல் பற்றியது. ''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே'' என்று சைவசமயத்தின் சிவோகம்பாவனையினை மாணிக்க வாசகப்பெருமான் அருளிச்செய்துள்ளார்.

**''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்''** என்பது திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த குறள்.

உயிர் ஆணவத்தினைச் சார்ந்திருந்தால் ஆணவ மயத்தினால் அறிவு துலங்காது சடமாய் நிற்கும். சிவபெருமானினைச் சார்ந்து நின்றால் சிவமாய் நிற்கும். முத்தி நிலையிலும் உயிர் உயிரேதான் என்பதினை, **''சிவமாக்கி எனை ஆண்ட''** என்னும் மாணிக்கவாசகப்பெருமானின் அருள்வாக்கு உணர்த்தியருளும். ஆள்பவனும் ஆளப்படுபவனுமாக சிவபெருமானும் உயிரும் முத்திநிலையில் விளங்கும். அதாவது இன்பம் கொடுப்பவனும் இன்பத்தினை நுகர்பவனுமாக சிவபெருமானும் உயிரும் விளங்கும். இவ்வுண்மையினை உணராது, சில உயிர்கள் தாமே கடவுள் என்று முடிவுசெய்து ஆணவத்தினைப் பெருக்கி உழலும். அங்ஙனம் உழல்வோரினை வழிபடுவது, நம்மையும் பிறழச்செய்யும்.


சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற**
**தீயார்சொல் கேட்பதுவும் தீதேஎ - தீயார்**
**குணங்கள் உரைப்பதுவும் தீதே் அவரோ(டு)**
**இணங்கி இருப்பதுவும் தீது**
- ஔவையார் அருளிய மூதுரை

தீயாரோடு இணங்கினால் சார்ந்ததன் வண்ணமாய் நாமும் தீயோராகிவிடுவோம். அதுபோல், நானே கடவுள் என்று உழல்வோரிடன் இணங்கினால், நாமும் அங்ஙனம் உழலும்பாதையினையே பெற்று பிறழ்வோம். எனவே, நாம் கைக்கொண்டொழுகி உய்யவேண்டியது பெரியபுராணம் காட்டும் சிவனடியார் இலக்கணத்தில் உயர்ந்த சிவபத்த வழிபாடேயொழிய, வேறெந்த மானிட வழிபாட்டும் அல்ல!

**4) இந்திரன் முதலிய தேவர்கள் சிவவழிபாடே செய்தனர். இந்திராதி தேவர்களினை வழிபடுவது சிவபத்த வழிபாடாகாதா?**

**வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்**
**தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாந் தொழவேண்டிச்**
**சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்**
**பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவுவனே** - திருவாசகம்

''தேவர் உன்னைத் துதிப்பது, தாம் உயர்வடைந்து தம்மை எல்லாரும் தொழ விரும்பியேயாம். வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற கொன்றை மாலையை அணிந்தவனே! நான் அப்படியின்றி என் பிறவித் தளையை அறுத்துக் கொள்ள விரும்பியே உன்னைத் துதிக்கின்றேன்.'' என்பது இப்பாடலின் பொருள். அடியேன், ஏற்கனவே உயிர் சார்ந்ததன் வண்னம் என்று கூறினோம். சைவசித்தாந்தம் உயிருக்குரிய இலக்கணமாகக் கூறும் உயிரின் இந்த இயல்பில் விளக்கம் இருந்தால் மட்டுமே, நாம் உண்மைகளை நன்கு விளங்கிக்கொள்ள முடியும்.

இந்திரன்,வருணன்,சனைச்சரன் முதலிய தேவர்கூட்டம் எல்லாம் சிவபெருமானை வழிபடுவது ''தாம் தமது பதவிகளில் இன்புற்று '' இருப்பதற்கேயாகும். நாயன்மார்கள் சிவபெருமானை வழிபட்டது சிவபெருமான்பால் கொண்ட அளவில்லா அன்பினாலாகும்.

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**
- பெரியபுராணம் 143 (திருக்கூட்டச்சிறப்பு )

தமக்கு பிறவாத நிலை வேண்டும்˙ முத்தி வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கூட நாயன்மார்களிடம் இருந்ததில்லை. அவர்கள் சிவபெருமான்பால் கொண்ட அன்பினாலேயே சிவபெருமானினை வழிபட்டனர்.

சிவபெருமானுடைய திருக்கூத்து வடிவத்தினைக் காணும் பேறு எக்காலமும் வாய்த்திருக்கும் என்றால் , ''மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே'' என்று அருளிச்செய்தார் அப்பர்சுவாமிகள். **'' மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்''** என்று வேண்டிக்கொண்டார் காரைக்கால் அம்மையார். தேவரும் மூவரும் சிவவழிபாடு செய்தது தமது பதவிகளினைத் தக்கவைத்துக் கொள்ளும் உலக இன்பத்தின் பொருட்டேயாகும். நாயன்மாரின் சிவவழிபாடு சிவபெருமான்பால் எந்தவிதமான கைமாறும் கருதாத அன்பினால் அமைந்தது.

**''பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்**
**போகமும் திருவும் புணர்ப்பானை''**

என்று அருளிச்செய்துள்ளார் சுந்தரமூர்த்தி பெருமானார். உலகியல் இன்பத்திற்கும் முத்தி இன்பத்திற்கும் நாம் வழிபடவேண்டிய கடவுள் சிவபெருமானே என்பதினால், உலகியல் இன்பத்திற்காக தேவரும் மூவரும் சிவபெருமானை வழிபட்டனர். பல்வேறு யோகிகள் முத்தி இன்பத்திற்காக சிவபெருமானை வழிபட்டனர். நாயன்மார்கள் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாது அளவிலா அன்பினால் சிவபெருமானை வழிபட்டனர்.

**இங்குநாம் சிலர்க்குப் பூசை**
**இயற்றினால் இவர்க ளோவந்(து)**
**அங்குவான் தருவார் அன்றேல்**
**அத் தெய்வம் எல்லாம்**
**இறைவன் ஆணையினால் நிற்பது**
**அங்கு நாம் செய்யும் செய்திக்(கு)**
**ஆணைவைப்பால் அளிப்பான்** - சிவஞானசித்தியார்

தேவாதி மூவரினை வழிபடுட்டாலும் அவர்களினால் அருளமுடியாது என்பதினையும், உண்மையில் நமக்கு அருள்வது சிவபெருமானே என்பதினையும் சிவஞானசித்தியாரில் சந்தானகுரவர் அருணந்தி சிவாசாரியப்பெருமான் அருளிச்செய்துள்ளார். நாயன்மாரினை வழிபடும்போதும் நாயன்மார் வடிவுதாங்கி அருள்வது சிவபெருமானேயாம். எனவே, உயிர் சார்ந்ததன் வண்ணம் என்பதினால், சிவவழிபாடுடையார் என்னும் பெயரில்

தேவாதி மூவரினை வழிபட்டால் தேவையின்பொருட்டு வழிபடும் சுயநல இயல்பே உயிரில் வளரும். நாயன்மார்களினை வழிபட்டால் கைமாறு வேண்டாது அன்பால் இறைவனை வழிபடும் அருள்நலம் உயிரில் பெருகும். இதனாலேயே, நாயன்மார்களுக்கு இணையாக நாம் எவரினையும் முன்வைக்கக்கூடாது என்று நம் முன்னோர் விதிசெய்தனர். இவ்வுண்மைகளினை உணராதோர் புறன் உரைகளினைத் தள்ளுதலே நமக்கு உயர்வினைத் தந்தருளும்.

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**பிறப்பு, இறப்பு ஆகியவற்றுடன் மாயை எங்ஙனம் தொடர்புடையது?**

பொருள் சத்தியாகவும் சத்தி பொருளாகவும் மாறும் என்பது ஒரு விஞ்ஞான உண்மை. உலகம், உலகப் பொருட்கள் குறித்த சைவ சித்தாந்தக் கொள்கையும் இத்தகையதே.

உடம்பும் உடற் கருவிகளும் மாயையிலிருந்து இறைவனால் படைக்கப்பட்டு உயிருக்குக் கொடுக்கப் படுகின்றன. இது பிறப்பு என்று கூறப்படுகின்றது. இறக்கும் பொழுது இவை திரும்பவும் மாயையாக மாறுகின்றன. ஆகவே பிறப்பு இறப்பு என்பன மாயை உடம்பு போன்ற பொருட்களாக மாறுவதும், அவை பின்னர் மாயையாக மாறுவதுமே ஆகும். அவை நிலை மாற்றங்களே. இக்கொள்கை சற்காரியவாதம் என்று சைவ சித்தாந்தத்தில் கொள்ளப்படும்.

உயிர்கள் பிறந்திறப்பதில்லை. அவை என்றுமுள் ளவை. பிறப்பும் இறப்பும் உடலைப் பற்றியனவே.

**சற்காரியவாதம் என்பதன் பொருள் என்ன?**

சற்காரியவாதம் என்பது சைவ சித்தாந்தத்தின் ஒரு அடிப்படைக் கொள்கை. சற்காரியவாதம் என்ற சொல், சத், காரியம், வாதம் என்னும் மூன்று சொற்களால் ஆனது. சத் (சத்து) என்பது மாற்றமடையாமல் என்றுமிருக்கும் ஒரு உள்பொருள். காரியம் என்பது ஒன்றின் செயற் பாடாக வந்தது. வாதம் என்பது கொள்கை. இதன்படி உள்ளது தான் தோன்றும். இதனால் இல்லது தோன்றாது என்பது பெறப்படும்.

உள்ளதான மாயையிலிருந்துதான் எமது உடம்பும் உலகப் பொருட்களும் தோன்று கின்றன. இல்லாத ஒன்றிலிருந்து (வெறுமையி லிருந்து) எதுவும்தோன்றுவதில்லை. மாயை என்ற சொல்லே இதனை 'உ' உணர்த்துவதாக உள்ளது. இச்சொல்லை மா, யா என்றும், மாய், ஆ என்றும் பிரித்துப் பொருள் காணுவதுண்டு. மா அல்லது மாய் என்றால் ஒடுங்குதல் (மாய்தல்). யா அல்லது ஆ என்றால் தோன்றுதல் (ஆதல்). இதனால் பொருட்களின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் (அழிவிற்கும்) மூலமாக இருப்பது மாயை என்பது உணரப்படுகிறது. முற்றழிவுக் காலத்தில் (பிரளய காலத்தில்) அனைத்தும் மாயையில் ஒடுங்கிப் பின் அதிலிருந்து தோன்றுகின்றன.

**மாயையிலிருந்து பொருட்கள் தோன்றி அழிவது எப்படி?**

மண்ணிலிருந்து குயவன் பானை, சட்டிகளைப் படைப்பதுபோல், மாயையிலிருந்து இறைவன், உள்ளடக்கிய அனைத்துப் பொருட்களையும் உடம்பை படைக்கிறான்

பானை காரியமாவதற்கு முதற்காரணம் (மூல காரணம்) மண். அதன் உரு ஆக்கத்திற்குத் துணையாக இருப்பது திரிகை. இது துணைக் காரணம். குயவனும் ஒரு காரணம். அவன் நிமித்த காரணம். இதே போல், உலகம் முதற் காரணம் மாயை துணைக் காரியமாவதற்கு காரணம் சிவசத்தி நிமித்த காரணம் சிவன்.

உயிரின் செயற்பாடுகளுக்கு உடம்பும் மனம் முதலிய உடற்கருவிகளும் தேவை. இவை முறையே தனு, கரணம் எனப்படும். உயிர் எடுத்த உடம்பு நின்று செயற்படுவதற்கு உலகம் தேவை. இது புவனம் எனப்படும். உயிரின் செயல்கள் அனுபவத்திற்கு வந்து பலன் தருவதற்கு அனுபவப் பொருட்கள் தேவை. இவை போகம் எனப்படும். தனு கரண புவன போகம் ஆகியவற்றை இறைவன் மாயையி லிருந்து படைத்து அளிக்கிறான். குயவனால் மண்ணிலிருந்து படைக்கப்பட்ட பானை முதலிய பாண்டங்கள் அழியும் பொழுது திரும்ப வும் மண்ணாக மாறுவதுபோல், இறைவனால் மாயையிலிருந்து படைக்கப்பட்டவைகள் பொழுது மாயையாக மாறுகின்றன அழியும்

**மாயையைச் சுத்தமாயை அசுத்தமாயை என்று இரண்டாகக் கூறுவதுண்டு. இது குறித்த விளக்கம் என்ன?**

மாயை ஒன்றுதான். அதன் செயற்பாட்டின் அடிப்படையில் அதனை சுத்தமாயை, அசுத்த மாயை ஆணவத்துடன் என்று இரண்டாக வகுத்துள்ளார். சேர்ந்திருக்கும் போது மாயை மயக்க உணர்வையும் தவறான எண்ணத்தையும் உண்டு பண்ணுகிறது. இந்த நிலையில் அது அசுத்தமாயை எனப்படுகிறது. அசுத்த மாயை ஆசையை உண்டு பண்ணி மோகத்துக்குக் காரணமாகிறது. இதனால் இதனை மோக காரணி என்று கூறுவதுமுண்டு. ஆணவச் சேர்க்கை இல்லாத நிலையில் உள்ளது சுத்தமாயை. இந்த நிலையில் அது மோகத்தை உண்டாக்குவதில்லை. இதனால் அது அமோக காரணி எனப்படுகிறது.

**மாயா காரியங்கள் என்பவை என்ன?**

மாயையின் செயற்பாட்டால் தோன்றுபவை மாயா காரியங்கள். மாயை இருவகை உலகமாகக் காரியப் படுகிறது. சொல்லுலகம், பொருளுலகம் என்பவை இவை. இவை முறையே சப்தப் பிரபஞ்சம், அர்த்தப் பிரபஞ்சம் என வட மொழியில் கூறப்படுகின்றன. மொழி, வாக்கு என்றும் சொல்லுலகம் குறிக்கப்படுகிறது.

சொல்லுலகம் மந்திரம், பதம், வன்னம் என மூன்று கூறுகளை உடையது. பொருளுலகம் தத்துவம், கலை, புவனம் என்னும் மூன்று கூறுகளை உடையது. இந்த ஆறு கூறுகளும் உயிர்களின் ஆன்மீக வளர்ச்சியில் முக்கிய இதனால் இவை பங்கெடுக்கும் வழிகளாகும். அத்துவாக்கள் எனப்படுகின்றன. அத்துவா என்றால் வழி என்பது பொருள்.

**வாக்கு எவ்வாறு வெளிவருகிறது?**

நாம் ஒன்றைச் சொல்லும் பொழுது, அச்சொல் உருவாகிறது. அந்நிலையில் அதனை உள்மொழி என்று அல்லது சொற்றொடர் முதலில் எமக்குள் (உள்ளத்தில்) கூறலாம். இங்ஙனம் உருவான மொழி வெளிவரும் பொழுது மூன்று நிலைகளில் விருத்தி யாவதாக சாத்திர நூல்களில் கூறப்பட்டுள்ளன.

இங்ஙனம் விருத்தியடைந்து வெளிவரும் மொழிஅல்லது வாக்கு அதன் முதல் நிலையான நிலையில் சூக்குமை வாக்கு எனப்படுகிறது. இது மிகவும் நுண்மையாக (சூக்குமமாக) இருக்கிறது. நாதம், பறை என்ற பெயர்களாலும் சூக்குமை வாக்கு அழைக்கப்படும். சூக்குமை வாக்கு சொல்லவும் கேட்கவும் படாமல் மிகவும் நுண்மையாக இருக்கும். இது பருநிலை அடைந்து வளர்ச்சியுற்ற பின்பே சொல்லவும் கேட்கவும் கூடியதாக இருக்கும்.

இதன் வளர்ச்சியில் முதலாவது நிலை பைசந்தி வாக்கு எனப்படும். பைசந்தி (பஸ்யந்தி) என்றால் விளங்குவது என்பது பொருள். விளங்காமல் இருக்கும் சூக்குமை என்ற முதல் நிலையிலிருந்து பைசந்தி என்ற இரண்டாவது நிலைக்கு வாக்கு வளர்ச்சியடைகிறது. இந்நிலையில் வாக்கின் வடிவம் நன்கு புலப்படாமல் ஓரளவு விளங்கியும் விளாங்கமலும் உள்ளது. இதற்கு மயில் முட்டையி லுள்ள நீரைக் கூறுவதுண்டு. அதில் பல்வகை நிறங் கள் இன்னவை என்று விளங்காமல் இருக்கும்.

பசந்தி வாக்கு விருத்தியடைந்த நிலையில் மத்திமை வாக்கு எனப்படும். இதில் வாக்கு முழு உருவத்தைக் கொண்டு இருக்கும். சொற்கள் விளங்கித் தோன்றும் ஆனால் சொல்பவனது குரல் அடியில், வெளியே சொல்லவும் கேட்கவும் படாத நிலையில் இது உள்ளது. வாக்கின் வளர்ச்சியில் மூன்றாவது நிலை மத்திமை.

மததிமை வாக்கு விருத்தியடைந்து வைகரி வாக்கு எனப்பெயர் பெற்று நிற்கும். வைகரி என்றால் விகாரப்படுவது (ஒலிக் கூறுகளாகச் சிதறி வருவது) என்பது பொருள். இது வாக்கின் வளர்ச்சியின் நான்காவது வாக்கை இரண்டாகப் பகுத்துக் நிலை. வைகரி கூறுவதுமுண்டு. தன் செவிக்கு மட்டும் கேட்கும் நிலையில் சூக்குமவை கிரி என்றும், பிறர் செவிக்கும் கேட்கும் நிலையில் தூலவைகரி என்றும் கூறப்படும். ஆகவே சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற ஒழுங்கு முறையில் வாக்கு விருத்தியடைகிறது. இவை நால்வகை வாக்கு எனப்படும்.

**நால்வகை வாக்கு சுத்தமாயையிலிருந்தா அசுத்த மாயையிலிருந்தா தோன்றுகிறது?**

வாக்குகள் யாவும் சுத்த மாயையிலுள்ள நாதத்தின் விருத்தியாக வருவன. இதனால் இவை சுத்த மாயையின் காரியமாய்த் தோன்று கின்றன. வாக்கு எனப்படும் சொல்லுலகம் சுத்தமாயா காரியமே.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க.கணேசலிங்கம்)**

# மயங்கா மரபுத் தமிழர்களின் ஆதீனங்கள் (மடங்கள்) ஒரு பார்வை



### மடங்கள் / ஆதீனங்கள் ஒரு அறிமுகம்
### திருமூலர் கூறும் குருபாரம்பரியம், குருமட வரலாறு

திருமூலர் உரைசெய்த திருமந்திரத்தில் உள்ள குருபாரம்பரியம் மற்றும் குருமட வரலாறு என்ற தலைப்புகளில் உள்ள திருமந்திரங்களைக் காண்போம்.

### குருபாரம்பரியம்

**நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்**
**என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே**

- திருமந்திரம் 67

**மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்**
**இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்**
**கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோடு**
**இந்த எழுவரும் என்வழி யாமே**

- திருமந்திரம் 69

### குருமட வரலாறு

**வந்த மடம்ஏழும் மன்னும் சன்மார்க்கத்தின்**
**முந்தி உதிக்கின்ற மூலன் மடம்வரை**
**தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்**
**சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே**

- திருமந்திரம் 101

**கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்**
**நலந்தரு மாளிகைத்தேவர் நாதாந்தர்**
**புலங்கொள் பரமானந்தர் போகதேவர்**
**நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே**

- திருமந்திரம் 102

### நந்திகள் நால்வர்:

1. சனகர், 2. சனத்குமாரர், 3. சனந்தனர், 4. சனாதனர் இந்நால்வரோடு, 5. சிவயோக மாமுனி, 6.பதஞ்சலி, 7.வியாக்கிரபாதர், 8. திருமூலர் ஆகிய எண்மரும் திருநந்திதேவரின் அருள்பெற்றநாதர்கள்.

1. சனகரால் சம்புசந்தானம் மலையமான் சந்தானம் என இரு சந்தானங்கள் உண்டாய்ப் பின் பலவாயின.

2. சனத்குமாரரால் விஞ்ஞானதேவர் மெய்கண்டதேவர் என இரு சந்தானங்கள் உண்டாய்ப் பின் பலவாயின.

3. சனந்தனரால் உபமன்னியதேவர், பரம தேவர், சிவானந்த போதர் என மூன்று சந்தானங்கள் உண்டாய்ப் பின் பலவாயின.

4. சனாதனரால் பிரமதேவர், சிங்கநாததேவர் என இரண்டாய்ப் பின் பலவாயின.

5. சிவயோகமாமுனிகளால் வாமதேவ சந்தானம் ஒன்றாய்ப் பின் பலவாயின.

6. பதஞ்சலிகளால் நிறைந்தநாயனார் சந்தானம் ஒன்றாய்ப் பின் பலவாயின.

7. வியாக்கிரபாதரால் சத்தியோசாதர் சந்தானம் ஒன்றாய்ப் பின் பலவாயின.

8. திருமூலதேவரால் எழுவகைச் சந்தானமாகிப் பின் பரம்பின.

பிரமதேவர், இந்திரதேவர், இந்திரதேவர், விட்டுணுதேவர், உருத்திரதேவர், கந்துருமகா இருடிகள், காலாக்கினி உருத்திரர், கஞ்சனூர் மலையமான் என்னும் எழுவரையும் அறிக. இவர்வழி அளவின்றிப் பரம்பிற்றாதலின் ஈண்டு எழுதிற் பெருகும். அது சந்தான வரலாற்றில் காண்க.

என வெள்ளியம்பலவாண முனிவர் முத்தி நிச்சயப் பேருரையிற் கூறுகிறார். சந்தான வரலாறு என்றொரு நூல் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. மேற்குறித்த சந்தானங்கள் பலவற்றில் இப்போது இருப்பது - விளங்குவது - மெய்கண்ட(தேவர்) சந்தானம் ஒன்றே. ஏனையவை இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. மெய்கண்டசந்தானமே திருக் கயிலாய பரம்பரை என்றும் மெய்கண்டசந்தானம் என்றும் இப்போது வழங்குவது. சுத்தசைவப் பதினெண் ஆதீனங்கள் திருக்கயிலாய பரம் பரையாகிய இம் மெய்கண்ட சந்தானத்தில் வருவதே.

### திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்

சைவ ஆதீனங்களின் குருபரம்பரை திருக் கயிலாயத்திலிருந்து தொடங்குகிறது. திருக்கயி லாயத்திலிருந்து தொடங்குவதால் திருக்கயிலாய பரம்பரை என வழங்கப் பெறும். பூவுலகில் மெய்கண்டார் முதலாகத் தொடங்குவதால் மெய்கண்ட சந்தானம் எனவும் வழங்கப்பெறும். சந்தானம் பரம்பரை. ஈண்டு சீடபரம்பரை.

திருக்கயிலாய மலையிலே, கல்லால மர நிழ லிலே, தென்முகப் பரமாசாரியராய் (தட்சிணா மூர்த்தியாய்) எழுந்தருளிய சீகண்டபரம சிவனி டத்திலே உபதேசம் பெற்றவர் திருநந்தி தேவர். திருநந்திதேவரிடம் உபதேசம் பெற்றவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் சனகாதி நால்வர். சனற்குமாரரிடம் உபதேசம் பெற்றவர் சத்தியஞானதரிசினிகள். சத்தியஞான தரிசினிகளிடம் பெற்றவர் பரஞ்சோதி மாமுனிவர்.


பரஞ்சோதி மாமுனிவரிடம் உபதேசம் பெற்றவர் மெய்கண்டார். மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றவர் அருணந்தி சிவம். அருணந்திசிவத்திடம் உபதேசம் பெற்றவர் மறைஞான சம்பந்தர். மறைஞான சம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர் உமாபதி சிவம்.

திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞானதரி சினிகள், பரஞ்சோதிமாமுனிகள் ஆகிய நால்வரும் கயிலாயவாசிகள் - தேவபரம்பரை - அகச் சந்தானகுரவர்கள்.

மெய்கண்டார், அருணந்தி, மறைஞானர், உமாபதியார் ஆகிய நால்வரும் பூவுலக வாசிகள் - பூதபரம்பரை - புறச் சந்தானகுரவர்கள்.

உமாபதி சிவத்தின் சீடபரம்பரையில் வருபவைதான் இன்றுள்ள திருஆவடுதுறை தருமபுரம் முதலிய சைவ ஆதீனங்கள்.

இதுவே திருக்கயிலாய பரம்பரை. இவர்கள் சந்தான குரவர் எனப்பெறுவர்.




இவர்களுள்:
1. திருநந்தி தேவர்
2. சனற்குமாரர்
3. சத்தியஞான தரிசினிகள்
4.பரஞ்சோதி மாமுனிகள்

இந்நால்வரும் கயிலாயவாசிகள் - தேவபரம்பரை - அகச்சந்தானகுரவர்கள்.

1. மெய்கண்டார்
2.அருணந்தி சிவம்
3. மறைஞான சம்பந்தர்
4.உமாபதி சிவம்

இந்நால்வரும் பூவுலகவாசிகள் - பூதபரம்பரை - புறச்சந்தானகுரவர்கள்.

இவர்களும், உமாபதி சிவத்துக்குப்பின் ஆதீன நிறுவனர்கள் வரை வரும் சீடர்களும், உபதேச பரம்பரை. ஆதீன நிறுவனர்கள் முதலாக இன்றுவரை வளர்ந்துவருவது அபிசேக பரம்பரை.

### சமயகுரவர்களும் சந்தானகுரவர்களும்

சைவத்தில், சமயகுரவர் சந்தானகுரவர் என ஆசாரியர் இருவகையர். ஒவ்வொரு வகையிலும் நால்வர். சமயகுரவரும் நால்வர். சந்தானகுரவரும் நால்வர்.

### சமயகுரவர் நால்வர்

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்(அப்பர்)
3. சுந்தரமூர்த்திகள்
4.மாணிக்கவாசகர்

### சந்தானகுரவர் நால்வர்

1. மெய்கண்டார்
2. அருணந்திசிவம்
3. மறைஞானசம்பந்தர்
4. உமாபதிசிவம்

சமயகுரவர் நால்வரும் ஒருவருக்கொருவர் சீடர் அல்லர். நால்வரும் தனித்தனி ஆசாரியர்கள். சந்தானகுரவர் நால்வரும் ஒருவருக்கொருவர் சீடர். சமயகுரவர்கள் தோத்திரங்களை அருளி னார்கள். சந்தானகுரவர்கள் சாத்திரங்களைச் செய்தார்கள். சமயகுரவர்களால் திருமுறைகள் தோன்றின. சந்தானகுரவர்களால் சித்தாந்த சாத்திரங்கள் தோன்றின. சமயகுரவர்களால் கோயில்கள் விளக்கம் பெற்றன. சந்தானகுர வர்களால் மடங்கள் உண்டாயின. சமயகுரவர்கள் கோயில் கோயிலாக நாடெங்கும் சென்று பாடினார்கள். இவர்களால் பாடப்பெற்றபின் அவை பாடல் பெற்ற தலங்களாயின. சந்தானகுரவர்கள் மடங்களில் இருந்துகொண்டு பாடஞ்சொன்னார்கள்.

சமயகுரவர்கள் பாடியருளிய திருமுறைகள் இன்றும் திருக் கோயில்களில் இறைவன் திரு முன்னர் வழிபாட்டுக் காலங்களில் ஓதப்பெறு கின்றன. சந்தானகுரவர்கள் செய்தருளிய சாத்திரங்கள் மடங்களில் பாடஞ்சொல்லப் பெறுகின்றன. கோயில்களில் இறைவன் திருமுன்னர் ஓதப்பெறுவதில்லை. கோயில் கோயிலாகச் சென்று பாடி வழிபட்ட சமய குரவர்களுக்குக் கோயில்களில் தனிச்சந்நிதி ஏற்பட்டு வழிபடப்பெறுகின்றன. சந்தான குரவர்களுக்குக் கோயில்களுக்கு வெளியே திருவீதியில் மடவளாகம் அமைந்தது.

சமயகுரவர்கள் கோயில்களில் வழிபடப் பெறுகிறார்கள். சந்தானகுரவர்கள் மடங்களில் வழிபடப் பெறுகிறார்கள். சமயகுரவர் திருவுரு வங்கள் நின்ற கோலத்தில் விளங்கும். சந்தான குரவர் திருவுருவங்கள் அமர்ந்த கோலத்தில் விளங்கும்.

கோயில்தோறும் சென்றும் நின்றும் பாடியவர்களுக்கு நின்ற திருக்கோலம்.

மடங்களில் அமர்ந்து பாடஞ் சொன்னவர்களுக்கு அமர்ந்த திருக்கோலம்.

சமயகுரவர்களைக் கோயில் நால்வர் என்றால், சந்தானகுரவர்களை மடத்து நால்வர் எனலாம்.

சமயகுரவர்கள் வளர்த்த சைவம், சந்தான குரவர்களால் சைவ சித்தாந்தமாயிற்று. சமய குரவர்கள் சமயா சாரியர்கள்(சமய ஆசாரியர்கள்). சந்தானகுரவர்கள் மதாசாரியர்கள் (மத ஆசாரி யர்கள்).

சமயகுரவர்களுக்குச் சந்தானம் (சீட பரம்பரை) இல்லை. சந்தானகுரவர்களுக்குச் சந்தானம் (சீட பரம்பரை) உண்டு. பெயரே சந்தானகுரவரா யிற்றே. சந்தானகுரவர்களின் சந்தானமே அபிசேக பரம்பரையாக, பல்வேறு திருமடங்களாக, இன்றளவும் வளர்ந்து பணிசெய்து வருகின்றன.

தொடரும்......

திருச்சிற்றம்பலம்

மூலம் - சைவ ஆதீனங்கள், ஊரன் அடிகள்

# தென்னாடு ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு சைவ சமய நற்சிந்தனைகளும், தேவாரப் பண்ணிசை பயிற்சிகளும்



யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை நற்சிந்தனை நிகழ்வு







யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை பண்ணிசை வகுப்பு









கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை நற்சிந்தனை நிகழ்வு





"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற அருள்வாக்கிற்கிணங்க, எமது அரும்பெரும் சமயமாகிய சைவசமய நெறியை காத்திட வேண்டிய பொறுப்பு சைவர்கள் அனைவரிற்கும் உரியதாகும். அவ்வாறு எம் நெறி காத்திடும் முனைப்போடு, பாடசாலை மாணவர்களை வழிப்படுத்தி செயற்பட்டு வருகின்றது, தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம். அதன் ஓர் கட்டமாக, கடந்த **23-06-2023** தொடக்கம் யா / கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் திங்கள்தோறும் (மாதந்தோறும்) இரண்டு வெள்ளிக்கிழமைகளும், கடந்த **20-07-2023** தொடக்கம் யா / யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் திங்கள்தோறும் (மாதந்தோறும்) இரண்டு வியாழக்கிழமைகளும் என, ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான சைவ சமய நற்சிந்தனைகளை தென்னாடு இதழ் ஆசிரியர் சிவத்திரு. செந்தமிழாதன் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

இச்செயற்பாடானது ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே சைவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை ஊக்கப்படுத்தும் முகமாகவே முன்னெடுக்கப்படுகின்றது. இந்நற்சிந்தனை நிகழ்வில், அவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில், மாணவர்களிடையே கேள்விகள் கேட்கப்பட்டு, அவர்களுக்கு பரிசில் கூப்பன் அட்டைகளும் வழங்கி வைக்கப்படுகின்றமை சிறப்பாகும். மேலும், தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த ஓதுவாமூர்த்திகள் "பண்ணிசைமானி" சிவத்திரு. மாணிக்கவாசகன் அவர்களால், தென்னாட்டின் ஏற்பட்டில், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் இரண்டு வார தேவார பண்ணிசை பயிற்சி வகுப்புக்களும் இடம்பெற்றிருந்தமை போற்றுதலுக்குரியதாகும்.

திருச்சிற்றம்பலம்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று – பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்







**“திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்”**

திருநல்லூரில் திருவடி தீட்சை பெற்ற திருநாவுக்கரசர், திருநல்லூரை நீங்கி திருப்பழனத்தை அடைந்தார். திருப்பழன இறைவனை வழிபட்டு பேறு அடைந்தார். திருப்பழனத்தைச் சார்ந்துள்ள திருப்பதிகளில் சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் ஒப்பற்ற திருக்கோயில்கள் பலவற்றையும் உள்ளம் உருகிப் பணிந்து செல்லும் நாவரசர், சொலற்கரிய சிறப்புடைய அப்பூதி அடிகளார் வாழ்ந்திருக்கும் திங்களூரை அடைந்தார்.

திங்களூரில் அந்தணர்களுக்கெல்லாம் மேம்பட்ட அப்பூதி அடிகளார், தம் மைந்தர்களுடன், சாலைகள், கிணறு, குளம், மரம், தண்ணீர்ப்பந்தல் முதலான பல அறங்களையும், **“ஆண்ட அரசு”** என்னும் திருப்பெயரால் அமைத்தமையை, அங்கு வந்து சேர்ந்த நாவரசர் கண்டும் கேட்டும் அறிந்து அவரது திருமனையை அடைந்தார்.

திருநாவுக்கரசர் வரும் செய்தியறிந்த அப்பூதி அடிகளாரும் உள்ளம் மகிழ்ந்து, மனைவி, மைந்தர், முதலாய பெருஞ்சுற்றத்துடன் மகிழ்ச்சி மீதூரத் தொழுது எழுந்து, சூழ வந்து, நாவுக்கரசரைத் தம் திருமனைக்கு வரவேற்று, தம்மிடத்தில் அமுது செய்யுமாறு வேண்டினார்.

நாவரசரும் இசைந்ததை அடுத்து, இதுகாலும் இல்லாத உணர்ச்சிவயத்தால் ஒன்றுபட்ட பெருங்காதலுடன், திருவமுதும், கறியமுது வகைகளும் முதலாக வேண்டுவனவற்றை வெவ்வேறு வகையில் விருப்பத்தால், ஆண்ட அரசுகள் உண்பதற்குரிய வகையில் உணவாகும்படியாய்ச் சமைத்து, நாவுக்கரசர் அமுது செய்தருள்வதற்காக, அவர்தம் திருப்பெயர் சூட்டப் பெற்ற மூத்த பிள்ளையை அழைத்துத் தோட்டத்தில் வளம் வாய்ந்த வாழையின் நிறம் பொருந்திய தண்டினை யுடைய குருத்தை அரிந்து கொண்டு வருமாறு பணிப்பவர், உடன் எவரையும் அனுப்பாது தனித்துச் சென்று வருமாறு அனுப்பினார்.

அதுபொழுது மூத்த திருநாவுக்கரசான அம்மகனும் விரைவாகத் தோட்டத்திற்குச் சென்று, அச்செயலில் காலம் தாழ்த்தாமல் அழகான வாழைக் குருத்தை அரியப்புகும் அளவில், பாம்பு ஒன்று தீண்டிட, அதைப் பொருட்படுத்தாது, அரசர் உணவு உண்பதற்காக அரிந்த வாழைக் குருத்தைக் கொண்டு, விரைவில் வந்து சேர்ந்தான். அம்மைந்தன் தீய நஞ்சு தன் தலைக்கேற மயங்கி வாழைக் குருத்தைத் தன் தாயாரின் கையில் தந்து, மயங்கி கீழே விழுந்தான். அதனைத் தாயாரும், தந்தையாரும் கண்டு, **“நாவுக்கரசர் இதனால் இங்கு அமுது செய்யத் தொடங்க மாட்டார்!”** என்று மனத்தில் எண்ணிப் பாம்பு தீண்டிய செய்தியை மறைத்து, அப்பர் பெருமானுக்கு அமுது செய்வித்தனர்.

எம்பெருமான் திருவருளால் அப்பூதி அடிகளாரின் தடுமாற்றத்தை அறிந்த நாவரசர் பெருமான், அவரின் துன்பத்தை நீக்குபவராய், அவர்கள் இவ்வாறு தம் மைந்தனின் இறந்த உடலை மறைத்துச் செய்த அன்பின் திறத்துக்கு அளவற்ற கருணை உடையவராய், அச்சடலத்தைக் கொன்றை மலர்மாலையைச் சூடிய மணமுடைய திருச்சடையாரின் திருக்கோயில் முன்பு கொணரச் செய்து,

**“ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை**
**ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்**
**ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது**
**ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே”**

திருப்பதிகத்தில் சிவபெருமானின் திருவருளைப் பாட, வந்து தங்கிய நஞ்சானது நீங்கிப்போகவே, அம்மகன் உறக்கத்தினின்றும் விழித்து எழுந்தவன் போன்று எழுந்திருந்தான். தம் அரிய மகன் உயிர் பெற்று எழுந்த அதனைப் பார்த்தும் தாம் அமுது உண்ணாமல் தாழ்த்து இருக்க நேர்ந்தமைக்கு உள்ளம் தளர்ந்து வருந்தும் அப்பூதியார், அவர்தம் மனைவியார் முதலியவரின் துன்பம் நீங்கும் பொருட்டு, அவர்தம் இல்லத்திற்கு வந்து, நாவுக்கரசர், அவர்கள் அன்புடனே அளித்த விருந்து அமுதை உண்டருளி அவர்களுடன் விருப்புடன் தங்கி யிருந்தார்.

அப்பூதியார் திங்களூரினின்றும் தம்மைப் பின் பற்றி வர, சிவபெருமானின் திருப்பழனப் பதியுள் புகுந்து, நாவுக்கரசர் பெருங்காதலுடன் தம் பெருமானின் திருவடிகளைச் சார்ந்து, மீதூர்ந்த அன்புடன் வணங்கித் திருமுன்பு நின்று வணங்கி, பெரும் பேற்றினையுடைய அப்பூதியடிகளாரின் நாள் ஒழுக்கத்தை (வேள்வி செய்து வரும் பாங்கினை) உயர்வாகப் பாராட்டி, நலம் மிகுந்த இனிய தமிழின் மாலையான திருப்பதிகச் சொன்மாலையைப் பாடினார். இத்திருப்பதிகம்,

**“சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே**
**பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்**
**முன்மாலை நகுதிங்கண் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்**
**பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ.”**

எனும் பழந்தக்கராகப் பதிகமாகும். இப்பதிகத்தில் பத்தாவது பாடலில், **“அஞ்சிப் போய்க் கலி மெலிய வழலோம்பு மப்பூதி குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.”** (தி. 4 ப.12 பா.10) என வரும் பகுதியை நினைவு கூர்ந்து, **“அடைமாலைச் சீலமுடை அப்பூதியடிகள் தமை நடைமாணச் சிறப்பித்து”** என சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

பின்னர், நாவுக்கரச பெருமான் எல்லாப் பதிகளிலும் வணங்கும் பணியைத் தலைமேற்கொண்டு, திருச்சோற்றுத்துறை முதலான பதிகளை அடைந்து, அவ்வவ்விடத்தும் உள்ள கோயில்கள் பலவற்றையும் பாடி வணங்கிச், செழுமையான திருப்பழனத்தை அடைந்து, அங்கு இறைவரின் திருக்கோயிலில் செயத்தக்க திருத்தொண்டுகளைச் செய்து வந்தார். பலநாள்கள் அப்பழனத்தில் தங்கியிருந்து, தம்முடியின் மீது திருவடி சூட்டிய திருநீலகண்டரின் அழகிய மலர்ச் சேவடிகளை எண்ணியவாறு, சேல்மீன்கள் உலவும் நீர் நிறைந்த காவிரியின் தென்கரை வழியே சென்று, அழகு மிக்க நீண்ட மாடக் கோயிலான திருநல்லூரை நாவுக்கரசர் அடைந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (177 - 198)**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு யாழினும் மென்மொழியம்மை உடனுறை அருள்வள்ளல்நாதர் திருக்கோயில் - திருமணஞ்சேரி

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 25 ஆவது திருக்கோயில் - திருமணஞ்சேரி )



**"படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி**
**அடைவானை அடையவல்லார்க்கு இல்லை அல்லலே!"**

**"இருமனம் கலப்பது தான் திருமணம்"** என்பது ஆன்றோர்களின் வாக்கு. வாழ்வில் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் என்பது ஒரு முக்கிய நிகழ்வாகும். ஆனால் சில ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சரியான காலங்களில் திருமணம் நடைபெறாமல் தள்ளிபோய் கொண்டேயிருக்கும். அப்படிப்பட்டவர்களின் குறையை போக்கி, அவர்களுக்கு நல்வாழ்க்கை துணையை அளிக்கும் இறைவன் அருள்மிகு யாழினும் மென்மொழியம்மை உடனுறை அருள்வள்ளல்நாதர் உறையும் திருப்பதியே திருமணஞ்சேரி திருத்தலம். இத்தலம் ஆமை பூசித்த அருட்தலமாகும்.

**அமைவிடம்: மயிலாடுதுறை மாவட்டம், தமிழ்நாடு**

மயிலாடுதுறை கும்பகோணம் தொடர் வண்டிப் பாதையில், குத்தாலம் தொடர் வண்டி நிலையத்திற்கு வடகிழக்கே சுமார் 5.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மயிலாடுதுறையிலிருந்து இத்தலத்துக்கு நகரப் பேருந்துகள் உள்ளன. இது காவிரியின் வடகரைத்தலங்களுள் ஒன்று.

**இறைவர் திருப்பெயர்:** உத்வாகநாதர், அருள் வள்ளநாதர், கல்யாண சுந்தரர்.

**இறைவியார் திருப்பெயர்:** கோகிலா, கோகிலாம்பாள், யாழினும் மென்மொழியம்மை.

**கோயில் மரம்:** வன்னி, கொன்றை, கருஊமத்தை.

**தீர்த்தம்:** எழுசமுத்திரத் தீர்த்தம் (சப்தசாகரம்).

**வழிபட்டோர்:** சம்பந்தர், அப்பர், உமையம்மை, மன்மதன், பரச முனிவர், ஆமை முதலியோர்

**பாமாலை:** திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்.

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

விடையானை மேலுல கேழுமிப் பாரெலாம்
உடையானை யூழிதோ றூழி யுளதாய
படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
அடைவானை யடையவல் லார்க்கில்லை யல்லலே.
(2-16-4)

### திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ் சேரியெம்
வட்ட வார்சடை யார்வண்ணம் வாழ்த்துமே.
(5 -87)

### திருத்தலச் சிறப்பு

திருமண வரத்திற்கு உலகப்புகழ் பெற்ற திருக்கோயில் இது. இங்கு ஒருதடவை வந்து இறைவனை வழிபட்டு விட்டுச் சென்றுவிட்டால் போதும் எத்தனை தடைகள் இருந்தாலும் அத்தனையும் தகர்ந்து திருமணம் உடனே நடந்து விடுகிறது. திருமண வழிபாட்டிற்காக இத்தலத்தில் நடைபெறும் கல்யாண அர்ச்சனை என்பது மிகவும் பிரசித்தமானது.

இந்த கல்யாண அர்ச்சனையில் (திருமணத்திற்கு முன்பாகவும் திருமணம் முடிந்த பிறகும்), கல்யாண சுந்தரருக்கு அர்ச்சனை செய்கிறார். சுவாமி மீத சாத்திய மாலையில் ஒன்றை அடியார்களுக்குத் தருகிறார். தம்பதிகள் தங்களுக்குள் அந்த மாலையை மாற்றிக் கொள்கின்றனர். திருமண வரம் வேண்டி வருவோர்களுக்கு அவர்களது கழுத்தில் மாலை அர்ச்சகரால் அணிவிக்கப்படுகிறது. அர்ச்சனை செய்த பின் தரப்படும் மாலையை வாங்கிச்சென்று வீட்டில் வைத்து பூசை செய்து வழிபட்டால், விரைவில் கல்யாணம் நடக்கும் என்பது தொன் நம்பிக்கை. கல்யாணம் நடந்தபின் அந்த பழைய மாலையை திரும்பவும் எடுத்து வந்து தம்பதிகள் உடனுறையாக, இத்தலத்தில் கல்யாணசுந்தரருக்கு அர்ச்சனை செய்து வழிபாட்டை பூர்த்தி செய்தல் வேண்டும்.

**இத்தல வரலாற்றோடு தொடர்புடைய கதைகள்:** தேரழுந்தூரில் அம்பிகைக்கு பசு சாபம் கொடுக்கப்பட்டது. அக்காட்டில் அம்பிகை பசு உரு ஏற்றும், கோமலில் திருமால் பசு மேய்ப்போனாக உருவெடுத்து பசுக்களை பராமரித்து வந்ததாகவும், திருக்குளம்பத்தில் ஈசன் பசுவின் குளம்புத் தழும்பை ஏற்றதாகவும், திருவாடுதுறையில் பசுவுக்கு முத்தி கொடுக்கப்பட்டதாகவும், திருந்துருத்தி என்னும் குத்தாலத்தில் பரத மாமுனிவர் நடத்திய யாக வேள்வியில் உமை மங்கை தோன்றினார் எனவும் அறியக்கிடக்கின்றன.

திருவேள்விக் குடியில் திருமணத்திற்காக கங்கணம் கட்டி, மங்கள நாமமும் செய்து குறுமுலைப்பாளையில் பாலிகை நிலைப்படுத்தலும் செய்தும், எதிர்கொள்பாடியில் இறைவனை எதிர் கொண்டழைத்தும், திருமணஞ்சேரியில் எம்பெருமான் உமையாளை காப்பாற்றி திருமணம் செய்து கொண்டார் என்றும் கூறுகின்றனர்.

ராகு கோள் தடைகள் நீங்கும் தலமாக இது காணப்படுகின்றது. ராகு கோள் தெய்வம் இங்கு முழு உருவில் உள்ளார். மனித உருவத்தில் கவச குண்டலத்தோடு காட்சி தருகிறார். இத்தலத்தின் தீர்த்தம் சப்த சாகரம் என்பது ஏழு கடலும் மாலையாக இறைவன் திருமணத்திற்கு வந்ததாக நம்பிக்கை.

### திருத்தல வரலாறு

சிவபெருமானும் உமாதேவியும் கயிலாயத்தில் இருக்கும்போது ஒருநாள் உமை ஈசனை வணங்கி மற்றொரு முறை தங்களை திருமணம் செய்து இன்புற வேண்டும் என்று வரம் கேட்க, தாராளமாக என்றார் ஈசன். ஆனால் எப்போது எங்கே என்று ஈசன் சொல்லாமல் இருந்ததால் நாட்கள் நகன்று கொண்டே இருந்தது. இதனால் அம்மையும் கோபத்தால் ஈசனிடம் சற்று அலட்சியமாக நடக்க ஆரம்பித்தார். இதனால் சினம்கொண்ட சிவபெருமான் உமா தேவியை பூவுலகில் பசுவாக பிறக்க செய்து விட்டார். பின் சாப நிவர்த்தி வேண்டி பல இடங்களில் பசுவாக அலைந்து திரிந்து ஈசனை வழிபடலானார்.

ஒருநாள் அம்பிகை பொழிந்த பாலால் திருமேனி குளிரப்பெற்றும் குளம்பின் தொடுகைத் தழும்பும் பெற்று மகிழ்ந்த சிவபிரான் உளம் கனிந்து அம்மை விரும்பியவாறு திருமணம் புரிந்து கொள்ளவும் சம்மதித்து, பரத முனிவர் நடத்திய யாக வேள்வி குண்டத்தில் தோன்றி உமையாளை திருமணஞ்சேரியில் திருமணம் செய்து அருளினார் என்பது தல வரலாறு.

### திருக்கோயில் அமைப்பு

இங்கு ஒன்பான் கோள்கள் (நவகிரகங்கள்) கிடையாது. கருவறையில் அம்மை தனியாக மணக்கோலத்தில் மணப்பெண்ணுக்குரிய நாணத்துடன் உள்ளார். இத்தலத்துக்கு கரு ஊமத்தை தவிர வன்னி,கொன்றை ஆகிய தலமரங்களும் உள்ளன.

இத்தலத்தில் இராச கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் கொடி மரம், பலிபீடம், நந்தி காணப்படுகின்றன. கோயிலின் வலப்புறம் விநாயகர் சன்னதி உள்ளது. இடப்புறம் நடராசர் சன்னதியும் அம்மன் சன்னதியும் உள்ளன. மூலவர் சன்னதிக்கு வலப்புறமாக கல்யாண சுந்தரர் காணப்படுகிறார். மூலவர் சன்னதியின் இடப்புறம் சண்டிகேசுவரர் சன்னதி உள்ளது.

**திருக்கோயில் கல்வெட்டுக்கள்:** இவ்வூரில் 28 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டிருக்கின்றன. அனைத்தும் சோழர்களுடைய கல்வெட்டுக்களே. (கி.பி.11-12ஆம் நூற்றாண்டு) நாடு - விருதராசபயங்கரநாடு, குறுக்கை நாடு, ஊர் திருமணஞ்சேரி, சுவாமிபெயர் திருக்கற்றளிமாதேவர் பரமசுவாமி என்பன. மற்ற ஊர்கள் கங்கைகொண்ட சோழ சதுர்வேதி மங்கலம், விடேல் விடுகுதேவிமங்கலம், கரிகாலசோழ சதுர்வேதி மங்கலம், திருஎதிர்கொள்பாடி என்பன.

விளக்குக்காகப் பணதானம் 1000, சில யோகிகள் தவசிகள் ஆண்டுக்கொருமுறை பங்குனித் திங்களில் உணவுக்காக நிலதானம், கோயிலுக்கு நிலதானம் (4-5-1045) சபையார் நிலதானம், (7-2-1123) திருமந்திர ஓலை சொற்படி நிலதானம், விளக்குக்காக 96 ஆடு தானம், கோயிலுக்குப் பொன்கிரீடம், உடைய பிராட்டியார் சொற்படி சந்தனம், துணி, எண்ணெய், திருவிளக்குக்காக 16 கழஞ்சு பொன் தானம், கோயிலில் தினப்படி பூசைக்குத் திட்டம், விளக்குக்கும் அதன் பீடத்திற்கும், எண்ணெய்க்குமாக 96 ஆடு தானம், விளக்குப்





பீடம் இவைகளுக்கு 45 காசு தானம், முழவு, விளக்கு, மணி, மூர்த்தி இவைகள் தானம், கல்தானம், இரவு விளக்குத் தானம், குகைகட்டப் பணமும் நிலமும் தானம் முதலியன.

இங்கிருந்த திருமாலைக் கரிகால்சோழ விண்ணகராழ்வான் என்பர். கோயில் பெயர் மணவாளப்பெருமாள். அதன் அதிகாரியின் பெயர் கந்தாடை நம்பி திருமணஞ்சேரி பிச்சன் என்பான் திருப்பணி செய்தான். கல்வெட்ட ஒரு கல்லும் கொடுக்கப்பட்டது. கோயிலில் குடமுழா வாசிப்பவர் பெயர் கூறப்பட்டுள்ளது.

உடைய பிராட்டி செம்பியன் மாதேவியார் கோயில் செலவு திட்டங்களை ஏற்படுத் தினார். நல்லமநாயக்கர் கோபுரம் கட்டினார். ஒரு கல்வெட்டில் அக்கினி புராண மந்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆதித்ததேவன் நாச்சியம்மன் கோயில் கட்டுவதற்கும் ஆலாலசுந்தரம் குகை கட்டுவதற்கும் பணமும் நிலமும் கொடுத்தார்.

தினந்தோறும் திருமணம் நடக்க வேண்டி ஆயிரக்கணக்கான ஆண்கள் மற்றும் பெண்கள் இக்கோயிலிற்கு வருகின்றனர். அதில் இருந்து நாம் இக்கோயிலின் பெருமையை அறிந்து கொள்ளலாம்.

**திருச்சிற்றம்பலம்**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## மேற்கிலங்கைச் சைவர்களின் பழமையின் சின்னம் இரத்மலானை திருநந்தீச்சரம் (எருதுக்கோயில்)









சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இலங்கையைச் திருமூலர் சிவபூமி என்று செப்பிய வாக்கிற்கு இணங்க இலங்கையின் மேற்குப் பகுதியிலிருந்த பண்டைய இராசதானிகளில் கோட்டை இராசதானியும் ஒன்றாகும், கோட்டை இராசதானிக்குட்பட்ட கொழும்பு காலி வீதியில் அமைந்துள்ள இரத்மலானை எனும் இடத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க பழமையான சிவன் கோயில் ஒன்று அமைந்துள்ளது. சிங்களத்தில் **"கொணா கோயில்"** என்று அழைக்கப்படுகின்றது. தமிழில் **"எருதுக்கோயில்"** என்பது பொருளாகும். இலங்கைத் தீவிலுள்ள சிவன் கோயில்கள் எல்லாம் ஈச்சரம் என்று அழைக்கப்பட்டு வருவதனால், இரத்மலானை சிவன் கோயிலும் **"திருநந்தீச்சரம்"** என்று அழைக்கப்படுகின்றது.

### திருத்தல வரலாறு

இரத்மலானையில் அமைந்துள்ள இச் சிவன் கோயில் ஏறத்தாள 1000 ஆண்டுகள் மிகப்பழமை வாய்ந்த கோயில் என்பதனை அங்கு கிடைத்துள்ள தொல்பொருட்சின்னங்கள் மூலமாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. 1968 ஆம் ஆண்டு இந்நகரில் மைதானம் அமைக்க வென்று நிலத்தைத் தோண்டும் போது சிவன் கோயில் ஒன்று இருந்தமைக்கான தொல்பொருட் சின்னங்களும், இவ்விடத்திலிருந்து சற்றுதொலை தூரத்திலும் அச்சிவன் கோயிலோடு தொடர்பு பட்ட இறைபடிமம் (விக்கிரகம்) போன்ற வழிபாட்டுப் பொருட்களும் கிடைத்துள்ளன. 1984ம் ஆண்டு மீண்டும் இவ் இடத்தில் அகழ்வாய்வு நடைபெற்ற போது, பெரிய அளவிலான ஆவுடையாரொன்றும், சிதைந்த நிலையில் நந்தி ஒன்றும், ஆவுடையாருக்கு சற்றுப்பொருந்தாத சிவலிங்கத்தின் மேற்குப் பகுதியும், அத்தோடு கற்சிலைகளும் கண்டெடுக் கப்பட்டதைத் தொடர்ந்து இத்திருக்கோயில் சிவவழிபாட்டிடமாக அடையாளப்படுத்தப் பட்டது. மற்றும் இக்கோயிலின் தலமரமாக ஆலமரம் விளங்கியுள்ளது. இதற்கு இவ்விடத்தில் 1000 வருடங்கள் என மதிக்கத்தக்க ஆலமர மொன்றும் உள்ளது மற்றும் இக்கோயிலின் சற்றுத் தொலைவில் தூர்ந்து போயுள்ள தீர்த்தக்குளமும், கிணறும் காணப்படுவதால் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களுடன் பொலிவு பெற்று விளங்கிய சிவன் கோயிலாக திகழ்ந்திருக்கின்றது என்ற முடிவிற்கு வரலாம்.

### சிங்கள இலக்கியத்தில் - எருதுக்கோயில்

கோட்டை இராசதானியை 1415 முதல் 1467 வரை ஆட்சி செய்த மன்னன் 6ம் பராக்கிரமபாகு. அம் மன்னனின் மகளின் பெயர் உலகுடைகுமாரி. இப்பெயர் தமிழ்ப்பெயராகும், இதனால் இச்சிவாலயத்துடன் இம் மன்னன் தொடர்பு பட்டவனாகக் கொள்ள இடமுண்டு. அதற்கு ஆதாரமாக அமைந்தது, இம்மன்னனின் காலத் தில் ராகுல தேரர் என்பவரால் இயற்றப்பட்ட **"சலவீஹினி சந்தேசய"** எனும் நூலாகும். இது தமிழில் **"குயில்விடுதூது"** என்று பெயர் பெற்று விளங்குகின்றது. இந்நூலில் இச் சிவன் கோயில் பற்றி மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இளவரசி புத்திரபாக்கியம் வேண்டி களனியி லுள்ள விபீஷணன் எனும் தெய்வத்திடம் குயிலை தூது அனுப்பும்போது, அக்குயிலுக்குச்செல்லும் வழியையும் தங்குமிடத்தையும் செப்புவதாக அப்பாடல் கவிதைகள் அமைந்துள்ளன.

அதில் முதல் பாடலில் **"அகில் கற்பூரம், சாம்பிராணி போன்றவற்றிலிருந்து எழும் வாசனைப் புகையின் மத்தியிலே, ஒளிர்கின்ற கொடிகளையுடையதும், மிகப்பெரிய மிருதங்கம் எனப்படும் மேளத்தினாலும் சங்குகளினாலும் எழுப்பப்படும் ஓசையுடனும் மக்கள் விருப்புடன் தமிழ் மொழியில் பாடும் தோத்திரங்களால் மனதைக் கவரும் ஈசுவரன் கோயில் தங்கவும்"** என்பது விளக்கமாயுள்ளது. இரண்டாம் பாடலில் **"ஈசுவரனின் காலைப் பூசையில் ஐந்து வித இசைக்கருவிகள் ஒலிக்கப்படும் அவ் ஐந்து இனிமை நாதங்களைக் கேட்டு நித்திரைவிட்டு எழு"** என்றும், மூன்றாம் பாடலில் **"சூரியன் உலகிற்கு ஒளிவீசும் வேளையில் ஈசுவரக் கடவுளுக்கு நடைபெறும் நடனங்களுடனான பூசைத் திருவிழாவை பார்த்து விட்டு பயணத்தைத் தொடரவும்"** என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்பாடலில் குறிப்பிடப்படும் சிவன் கோயில் இது என்பது அறியப்படுகின்றது. அங்கு தமிழில் தோத்திரம்பாடி, இசைக்கருவி இசைத்து, நடனங்களுடன் பூசை வழிபாடுகள் நடைபெற் றுள்ளன மற்றும் அங்கு தமிழர்கள் வாழ்ந்துள்ள னர் என்பதையும் ஊகிக்க முடிகின்றது. எனவே ஐரோப்பியர் இலங்கைக்கு காலடி எடுத்து வைக்க முன்பு பழமையான சிறப்பு வாய்ந்த சிவன் கோயிலாக விளங்கியுள்ளமை அச்சிங்கள தூது இலக்கியத்தின் மூலமாக அறியமுடிகிறது.

### அந்நியர்களின் ஆதிக்கத்தில் எருதுக்கோயில்

இலங்கையில் சைவசமயமும் பௌத்த சமயமும் தழைத்தோங்கிய காலகட்டத்தில் கொழும்பு தென்பகுதியை நோக்கி கி.பி 1518 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பத் தீர்மானித்தார்கள் அதற்கு முதற் பலியான கோயிலாக இரத்மலானை சிவன் கோயில் விளங்கியது. அதன் பின் பலபௌத்த விகாரைகளும் அவர்களின் கிறிஸ்தவப் போதனைகளுக்குப் பலியாகின. கி.பி 1519 ஆம் ஆண்டு ஆவணித் திங்களில், இரத்மலானை சிவன்கோயில் நோக்கி போர்த்துக்கீசப்படைகள் வந்து சேர்ந்து, கோயில் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. பழமையாகவும், அழகிய கற்சிலைகளையும் கொண்ட இரத்மலானை சிவன் கோயில் கற்துண்டுக் குவியல்களாக சிதறுண்டது. அக் கோயிலில் பூசகராகத் தொண்டாற்றிய குப்புசாமி குருக்களும் அவர்களது சில குடும்ப உறுப்பினர் களும் கொல்லப்பட்டனர். இன்னும் சிலரை கிறிஸ்தவ சமயத்தில் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்டனர்.

போர்த்துக்கீசரின் ஆட்சி முடிவுற்றதும் இலங்கையில் ஒல் லாந்தரின் ஆதிக்கம் ஆரம்பமானது. அவர் களின் காலத்தில் உள்ளூர் சமயங்க ளுக்கு ஓரளவு சமயச் சுதந்திரங்கள் கிட்டி யதால். கி.பி 1717ஆம் ஆண்டு கதிர்காம முருகன் கோயில் நிர்வாகத்தின் மேற்பார்வையின் கீழ் எருதுக்கோயில் இருந்த இடத்தில் ஓர் முருகன் கோயில் கட்டப்பட்டு பூசை வழிபாடுகள் தொடங்கப்பட்டது. அன்று முதல் கதிர்காமக் கோயிலின் கிளைக்கோயிலாக பௌத்தர்கள் "கொணா பெந்தி கதரகம தேவாலயம்" என்று அழைத்து வருகின்றனர். ஆனாலும் இங்குள்ள பௌத்தர்கள் எருதுக் கோயிலை நினைவில் வைத்துக் கொண்டுள்ளனர். மீண்டும் இவ்விடத்தில் கொணா கோயில் (எருதுக்கோயில்) கட்டப்பட வேண்டும் என்ற விருப்புடன் இருக்கின்றனர்.

### சிவன் திருக்கோயில்ச் சின்னங்கள்

1986 ஆம் ஆண்டு இக் கோயிலை புனரமைக் கும் பணியில் அத்திவாரம் அகழும் போது இச்சிவன் கோயிலின் புராதன சின்னங்கள் வெளிப்பட்டன. 13" உயரமும் 35" நீளமும் 26" விட்டமுடைய கருங்கல்லிலான ஆவுடையார் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கல்லில் தட்டினால் வெண்கல ஒலி கேட்கும், இவ் ஆவடையார் தற்போது அமைக்கப்பட்டுள்ள முருகன் கோயிலில் காணப்படுகின்றது. இங்கு கிடைத்துள்ள நந்தி இரு துண்டுகளாகத் தகர்ந்துள்ளது. அது 25" நீளமும் 11" அகலமும் 20" உயரமும் கொண்ட தரையில் வைக்கப்பட்டுள்ளது. சிவன் கோயிலில் தகர்க்கப்பட்ட கற்தூண்களும், படிமத்துண்டுகள் மற்றும் செதுக்கப்பட்ட கற்துண்டுகள் என்பன பௌத்த விகாரையில் இன்றும் காணப்படு கின்றது.

மற்றும் இச் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ள ஒரு வீட்டின் நிலத்திலிருந்து, உமையம்மை யின் திருவுருவாச்சிலை கண்டெடுக்கப்பட் டுள்ளது. அச்சிலையின் தலைப்பாகம் அகழ்வின் போது சிதைவடைந்துவிட்டது. இச்சிலையானது தொல்லியல் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, கி.பி 11 ஆம் நூற்றாண்டுக்குரியது என உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது.இச்சிலையும் இச் சிவன் கோயிலுக்குரியதென்று நம்பப்படுகின்றது.

இச் சிவன் கோயிலைப் பற்றி முறையான ஆய்வுகள் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை. அவ்வாறு முன்னெடுக்கப்பட்டால், இத்திருக் கோயில் பொலநறுவைக் காலத்திற்கு முந்தியது என்ற சிறப்பைப் பெறும். போர்த்துக்கீசரின் அழிவுக்குப் பின்னர் பௌத்த முறையில் வழிபட்டு வந்தாலும் இன்று இச் சிவன் கோயில் கருவறை, விமானம், மண்டபம் என்னும் உறுப்புக்களைக் கொண்டு முழுமையான சைவப் பாரம்பரியக் கோயிலாகக் கட்டப்பட்டு புதுப்பொலிவுடன், திருநந்தீச்சரராக இறைவன் அருள் வழங்கவுள்ளார்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருச்சிற்றம்பலம்




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Importance of Preserving Saivam Amongst Tamil Diaspora

Saivam is an ancient yet everlasting religion, and moreover, a way of life, that has provided Tamils knowledge, enlightenment and importantly a pathway to divine grace. Saivam has stood the test of time and still remains an integral part of Tamil culture, philosophy and tradition, one which must continue to prosper through future generations amongst Diaspora Tamils situated in every corner of the world. Saivam transcends borders and allows us to bind with our ancestral roots and identities, a notion that everyone resonates with. Saivam acts as a beacon of light that illuminates a path not only to divine grace but also a path of cultural preservation and identity.

In an ever-changing world, the preservation of Saivam within the worldwide Tamil communities becomes even more crucial. It is essential that we uphold and promote its customs, traditions, and philosophies, to ensure the continuity of our cultural heritage for future generations.

As Diaspora Tamils, we must work in unison to preserve Saivam not only from a religious standpoint but for the preservation of the Tamil language. It is within our sacred verses, hymns, and rituals of Saivam that our language, Tamil, thrives. As we immerse and promote ourselves in the chanting and understanding of these Saiva texts, predominantly the 12 Thirumurai, we preserve our linguistic heritage, nurturing our collective memory and ensuring the prosperity of the Tamil language.

In an ever-evolving world, individuals encounter numerous obstacles and challenges that often bring stress and pain to their lives and those around them. However, Saivam provides us with an ethical framework, an inner compass that guides us to self-clarity and a more calm nature. Saivam with its profound philosophies strengthens us individuals to navigate the complexities of life. It is a solution to all adversaries. As a result, by embodying these values of Saivam amongst Diaspora Tamils we not only enrich our own lives but also contribute positively to the communities we are a part, creating a positive atmosphere for people to live in.

As Diaspora Tamils, Saivam plays a pivotal role in shaping our collective cultural identity. It serves as a reminder to us and those around us of who we are amidst the ever-changing broader societal landscape. Saivam bonds us together as one society, fostering a sense of unity and solidarity. The temples that we have built on all corners of the world and the temples we still continue to construct not only act as places of worship but they have the power to be cultural hubs, nurturing a vibrant atmosphere for us to highlight our shared experiences through tradition. Therefore, the preservation of Saivam amongst Diaspora Tamils is essential for the growth and prosperity of Tamil communities worldwide.

தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !

These two lines in the Potri Thiru Agaval translate to "Long live Oh Siva, who belongs to the Southern country, Long live (Oh Siva) who is the God for people of all countries." The statement highlights the notion that Lord Siva is the god of the people of all countries and underscores the need for Diaspora Saivaites to uphold this philosophy and preserve Saivam worldwide. Such preservation is crucial for safeguarding the Tamil language, Cultural Identity and ethically facing the obstacles that individuals encounter.

# Saiva Saint Sunthamoorthy Nayanar



Siva P.Abiram SG

Alala Sundarar was a saint serving Sivan at Mount Kailash, where he fell in love with two women Aninthithai and Kamalini. They both also fell in love with him, Sivan let them take births on earth, enjoy married life and return.This is what led to Sundarar's birth on earth.

Nambi Aroorar (Sundarar) was born into a Brahmin family in the city of Tirunavalur in the 8th Century. Sundarar is one of the most prominent of the 63 nayanars and was an avid Siva Devotee.

Firstly when he was about to be married, an old man turned up at his wedding and proved Sundarar was his slave and then vanished. Sundarar soon realised that it was Sivan who came in the form of an old man. He took this a command from Sivan to not get married right now and instead Sundarar started his devotion to Sivan by singing his Thiruthondathokai Pathikam which introduced the nayanmars to the world.

In the next stage of his life, Sundarar moved around Tamil Nadu, visiting Sivan Temples all around Tamil Nadu. However Sundarar was reluctant to enter Thiruvathikai as he did not want to walk on the holy land where Appar was serving. So he stayed overnight at a nearby village instead, while sleeping Sivan disguised as an old brahmin put his feet on Sundarar's head and gave him theeksai. Sundarar then walked from temple to temple until he reached Tiruvarur.

At Tiruvarur Sivan blessed him to be in the appearance of a girl named Paravayar Sundarar fell in love with her, and married her. This girl was no other than Kamalini who Alala Sundarar fell in love with at Mount Kailash.After a few years of married life, Sundarar visits the Sivan temple in Thiruvottriyur. There he meets a girl named Cankali who was actually Aninthithai from Mount Kailash. This leads to Sundarar's second marriage, but only after his wedding vows including the promise of never leaving Cankali and Thiruvottriyur. After marrying his second wife, Sundarar misses his first wife Paravai. He does not keep his word, and leaves for Tiruvarur. The broken vow causes him to go blind before he reaches Tiruvarur. As a blind man, he visits many Sivan temples and sings there. Slowly in stages, he becomes closer to Sivan and recovers his sight.

Sundarar also performed many miracles in his life.Once in Thirupungur there was a long drought period. The reigning Chola king sought Sundarar's help to address this problem. The saint agreed to help but put up a condition saying that 12 acres of land be donated to the Thirupungur temple if he is able to bring the rains. The king agreed and as soon as Sundarar completed his hymn praising Sivan at Thirupungur temple it started pouring incessantly. After a few days, Sundarar was summoned again by the king to fix the problem of heavy rains. Sundarar once again insisted that 12 more acres be given to the temple should the rains stop after his song. The Rains became lighter and 12 more acres were added to the temple land.

At Avinashi temple, Sundarar sang his devotional hymns and resurrected an eight-year-old boy who had died three years ago, after being swallowed by a crocodile.

Sundarar's hymns make up the seventh volume of the thirumurai, Sundarar's contributions to Thirumurai were marked by his profound and heartfelt poetry, which expressed his deep devotion and love for Sivan. Through his songs, Sundarar promoted the path to bliss and preserved the richness of Tamil language and culture.

On his second visit to Kodungallur, at the age of 18, Sundarar had had enough of the earthly pleasures and wanted to be back in Kailash with Sivan. So he sang a hymn to Sivan, asking him to relieve him of the earthly burden and take him back to Kailash. On hearing his plea, Sivan sent a white elephant to escort Sundarar. When Sundarar's king and friend Cheraman Peruman saw his beloved friend depart to the heavenly abode, he did not want to be separated from him. So he got on his horse and chanted the Namasivaya mantra in his ears, which made the horse soar up in the air.

# Introduction to Saiva Sithantham (Saiva Philosophy)



M. Sivashunmugam
Professor
Saiva Siththantha
Direct Training Centre,
Thiruvavaduthurai
Aatheenam.

"The Saiva Sithantham philosophy is the best product of the Dravidian intellect. It is the most elaborate,influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India." G.U.Pope.

The above statement from G.U.Pope [who translated Thirukural and Thiruvasagm to English]reveals the greatness of saiva philosophy.

## What is Saivam?

1. Does it mean being vegetarian?

   No. Here we do not mean the food

2. Does it say about the caste?

   No. Not at all.

Saivam is a religion which worships Lord Siva as the prime deity. It is a community connected with Lord Siva. It is simple that people who follow Lord Siva are Saivites. It also clearly states that to whom you were born, what language you speak and where you live don't matter. Anyone from any part of the world who worships Lord Siva is a Saivite.

## What is special about Saivam?

Saivam is

1.Everlasting.
2.Logical.
3.Scientific
4.Practical.
5.Progressive ... and so on......

### Everlasting

All the religions in the world today have the history of their origin. There are some religions today which are as old as 3500 years. But Saivam has existed from day one this universe began. There are proofs that Lord Siva worship has been there for more than 10,000 years as some idols found out from US forests have been tested and have proved that the life of that stone idol is more than 10,000 years.

### Logical

Saiva siddhanta philosophy presents its principles in a logical way so that everyone can understand and accept. It talks about 36 categories of this cosmic world. Dr.Theos Bernard, an American explorer and religious writer, records Saiva Siddhanta Philosophy as below."The unique position of Saiva Siddhanta in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of 36 categories. This exposition is no mere metaphysical speculation but is purely a logical account on scientific principles.

### Scientific

Many inventions today have been discussed much before in the Saiva literature. We are doing research on the Galaxy now which is very well given in the Saiva books. Many scientific truths about this universe are available in Saiva literature and some points are yet to be established by scientists and they are researching it.

### Practical

Any religion can survive if its policies are practical and easy to follow. Saiva Siddhanta never advises a tough and severe life style. The policies are so easy to follow as they are part of our life.

### Progressive

The big advantage of Saiva siddhanta is that its principles are optimistic.

It clearly emphasizes that honest prayer alone brings all success. No need to suffer.

Saiva Siddhanta philosophy is established with three basic substances.

1. God - Pathi.
2. Soul - Pasu.
3. Aanava - Pasam.

All these substances are ever existent and they are not created by anyone. Aanava does not get attached with God and if God approaches Aanava, it could not stand in front (Like darkness cannot stand in front of light). Soul has the quality of getting connected with both God and Anava. God with all his grace is always kind on souls. But the case of Aanava is directly opposite. All the despairs experienced by the souls is created by Aanava.

From the start of time, aanava has been connected with souls. Aanava is one in number like God. Souls are many. But one Aanava has an impact on all the souls. Aanava hides and suppresses the soul's brain, its operating power and also its likes and dislikes. Soul has become inactive and cannot realise about itself as well as Aanava which has done the damage, is also not able to understand the existence of God who is there to help. God with all his love on the soul comes down to help even though soul has not requested for it because of its ignorance.

God's project is to detach the soul from Aanava [from despair] and taking them to his feet [happiness]. To detach the Aanava , God is making souls experience this world.

He created this world and body for souls from Maya. He is giving the power of action to the soul from Karma. ( In Tamil it is called as Kanmam / Vinnai) Soul has become operational now. With the experience it gains, Aanava's grip is getting loosened and one day it will be gone.

All our deeds are recorded by God and our next birth is decided by him as per our karma / Vinai.

As long as Karma is on our account, we shall be given birth to experience and exhaust the karma. How to get out of birth then? To get away from Karma, we are supposed to keep Divine Grace in front of all our actions. Such actions will not be recorded as karma.

Once we are wise and matured to this level,God comes in the form of a Guru and gives initiation [Thekkai]. This is called Upathesam, with sincere prayers, Aanava loses its grip and soul reaches God's feet enjoying all the happiness. This Supreme Bliss is available for all the souls.Saiva Siththantha gives great motivation for all the souls as our journey is towards Happiness and it is ensured.

# Carrum Downs Siva Vishnu Thirukoyil Melbourne



**Siva. Vidhujan Sivasuthan**
**Year 8**
**Melbourne, Victoria.**

The temple's historical roots can be traced back to the efforts of the Tamil diaspora in Australia. Built in the traditional Tamil Architectural style, it stands as a testament to the rich cultural heritage that Tamils carry with them to their new homeland. For Tamils, the Arulmiku Siva Vishnu Temple is more than just a place of worship, it is a space where they can connect with their religious roots and seek solace. The presence of all gods create an atmosphere of devotion and spiritual growth, making the temple a spiritual place away from the Tamil's homeland.

Beyond its religious significance, the temple plays a crucial role in preserving Tamil culture and traditions. It organises various religious festivals, rituals, and cultural events, providing a platform for Tamils to celebrate their arts, music, dance, and culinary traditions. These festivities foster a strong sense of cultural pride and unity among the Tamil community, while also promoting cross-cultural understanding as people from different backgrounds join in to the celebrations.

In addition to being a cultural hub, the Arulmiku Siva Vishnu Temple serves as a community centre that brings Tamils together. It acts as a meeting place for social activities, educational programs, and support systems for new immigrants. The temple helps new comers assimilate into the community and find a sense of belonging.

Moreover, the temple contributes to the preservation of Tamil language and heritage. Through various educational initiatives, it offers programs, workshops, and classes that promote Tamil language, arts, and spiritual teachings. These efforts ensure that younger generations stay onnected to their roots and carry forward the Tamil identity into the future. In conclusion, the Arulmiku Siva Vishnu Temple in Carrum Downs plays a significant role in the lives of Tamils living in Victoria.

As a spiritual sanctuary, a cultural symbol, and a community centre, it fosters a sense of unity, cultural pride, and spiritual growth among the Tamil diaspora. By preserving their heritage and providing opportunities for cultural expression, the temple continues to be a cherished institution that strengthens the bond between Tamils and their roots.



# Ancient Saiva Temples – Arulmiku Mylapore Kapaleeswarar Thirukoyil



**Siva. B. Mathavan**
**Chennai**

Great Saivite Saints Tirugnana sampanthar, Tirunavukkarasar and Suntharar had sung the glory of Lord Kapaleeswarar in their Thevaram hymns. This is the 24th Siva temple in Thondai Nadu-Nadunadu region praised in Thevaram hymns. The temple is closely associated with the history of Saint Tirugnana Sampanthar who restored Poompavai to life from the bones and ashes preserved by her father Sivanesar. The father was intending to give his daughter to the saint in marriage. But fate had it that she died of a snake bite. Yet, the father preserved her bones in a pot to be handed over to the child saint when he visited the place. Sambanthar did visit the place. Narrating his



sad story, he placed the pot before the saint.

Sampanthar sang a pathikam-10 verses, beginning with the line, 'Mattitta Punnai' listing the various festivals of Lord Siva in the first three lines asking her in the final line, how she could miss the festivals dedicated to Lord Siva. The pot broke off and Poompavai came alive in her full beautiful form. His joy knowing no bounds, the father asked the saint to accept his daughter. Sampanthar told him that he had now become her father as he gave her life again and could see her only as a daughter. Poompavai spent the rest of her life alone praying to Lord Siva attaining salvation in the end.

**By Air:**

The Chennai International Airport is one of the finest and well-connected airports in India. It is connected to all the major cities inside the country as well as all over the globe. After landing on the airport you can find a lot of taxi's and Tamil Nadu government buses. Either grab a taxi, or board in a bus to Mylapore, which is just 16 kms from the airport.

**By Rail:**

Chennai Central Railway Station is nearly 8 kms from the Mylapore where Kapaleeswarar Temple is located. There are frequent trains from all the major cities in India to Chennai, or moves via Chennai. Therefore it is easy to connect through rail. From the station grab a taxi or bus to Mylapore.

**By Road:**

The Kapaleeswarar temple is 8 kms away from the Chennai City and Chennai City is well connected to almost all parts of the country by National Highway and all parts of the Tamil Nadu State by the state highway. Therefore if you are travelling by car, it is easy to reach the temple. Also if you are considering bus, then Government buses as well as private buses are available from all the cities in South India.

# Introduction to Sivapuraanam



Sivapuranam is an epic of Lord Siva. The value of Sivapuranam is a globe. This Hymns has 95 lines with many grateful meanings. It is recited largely at temples, homes, and special occasions. Every Lord Siva's devotee sing Sivapuranam and Namachivaya mantra in any circumstances. Sivapuranam shares some of the dominant characteristics of this body of literature.

It is Sung by Saint Manikavasagar and written by Lord Siva. He is a sincere devotee of Lord Siva. Saint Manikkavasakar, the author of Thiruvasakam and Thirukkovaiyar which was put together under 8th Thirumurai. Thiruvasakam is the compilation of 656 devotional verses of a very high order for the soul's realization. This part contains 51 separate poems, the first is called the Sivapuranam.

The Sivapuranam is the most sacred and the bhakta who reads it with utmost devotion will gain both, material and spiritual pleasure and mental release.

The life cycle of a soul is narreted in this section.

pulaakip poodai pulluvaai maramaaki
pal virukam aaki paravaiyaai paampaaki
kallaai manitharaai pēyaai kanankalaai
valasurar aaki munivaraai thēvaraai
sellaa nindra ith-thaavara sangamaththul
ellaap-pirappum piranthu illaithēn emperumaan
meiyē unn pon adikal kandu indru veedutrēn - Line 32

'The grass and herb and worm and tree
The diverse beast,the bird and snake
The stone and man, the ghoul and hosts
The mighty demons, sages and gods
Among these static and mobile
Forms all of species of life
I've been born and wearied My Lord.

While he was alive itself, he mentioned in Sivapuranam line 32, he has completed his life cycle and now he also realised the true feet of lord Siva and settled there. This is absolutely aligning with his age where he merged and settled in lord Siva's glorious feet.

We can write and talk more about Sivapuranam but we will leave it here. Please memorise and sing Sivapuranam daily to realise the real way of experiencing the god.

# Sivapuraanam

*Thiruchitrampalam*

Thollai irum piravi soolum thalai neekki
allal aruththu aanantham aakiyathē ellai
maruvaa neri yalikkum vaathavoor enkōn
Thiruvaasakam ennum thēn

Namasivaayavaalgha naathan thaalvaalgha
imaippoluthum en nenchil neenkaathaan thaalvaalgha
kōkalli aanda kurumanithan thaalvaalgha
aakamam aaki nindru annippaan thaalvaalgha
ēkan anēkan iraivan adi vaalgha

vēkam keduththu aanda vēnthan adi velka
pirapparukkum pinjnakandran peikallalkal velka
puraththarkuch seyōn than poonkallakal velka
karanguvivaar ul makillung kōn kalallkal velka
siranguvivaar ōnguvikkum seerōn kallal velka

Eesan adi pōttri enthai adi pōttri
thēsan adi pōttri Sivan sēvadi pōttri
nēyaththē nindra nimalan adi pōttri
maayap pirapparukkum mannan adi pōttri
seeraar perunthurai nam thēvan adi pōttri

aaraatha inpam arulum malai pōttri
Sivan avan en sinthaiyul nintra athanaal
avan arulaalē avan thaal vanangi
sinthai makillach Sivapuraanam thannai
munthai vinai muluthum ōya uraippan yaan

kannuthalaan than karunai kan kaadda vantheithi
ennuthatku eddaa ellilaar kallal iranchi
vinnirainthu mannirainthu mikkaai vilankoliyaai
ennirainthu ellai ilaathaanē nin peruncheer
pollaa vinaiyēn pukallumaaru ondru ariyēn

pulaakip poodai pulluvaai maramaaki
pal virukam aaki paravaiyaai paampaaki
kallaai manitharaai pēyaai kanankalaai
valasurar aaki munivaraai thēvaraai
sellaa nindra ith-thaavara sangamaththul

ellaap-pirappum piranthu illaithēn emperumaan
meiyē unn pon adikal kandu indru veedutrēn
uiyya enn ullaththil ōmgaaramaai nindra
meiyaa vimalaa vidaippaagaa vēthangal
"aiyaa!" ena ōngi aalnthu akandra nunniyanē

veiyaai thaniyaai iyamaanan aam vimalaa
poiyai yinavellaam pōyakala vantharuli
mei gnanam aaki milirkindra meichudarē
engnanam illaathēn inpap perumaanē
angnanam thannai akalvikkum nal arivē

aakkam alavu iruthi illaai anaithulakum
aakkuvaai kaappaai alippaai arul tharuvaai
pōkkuvaai ennai pukuvippaai nin thollumpil
naatraththin nēriyaai sēyaai naniaanē
maattram manam kaliya nindra marayōnē

karantha paal kannalodu nei kalanthaat-pōla
siranthadiyaar sinthanaiyul thēnoori nindru
pirantha pirapparukkum engal perumaan
nirangal ōrr ainthu udaiyaai vinnōrkal ēththa
marainthirunthaai emperumaan valvinai yēn thannai

marainthida moodiya maaya irulai
aram paavam ennum arung-kayitraal kaddi
puranthōl pōrthu engum pullu allukku moodi
malam chōrum onpathu vaayit-kudilai
malankap pulan ainthum vanchanaiyai seiya



vilanku manaththaal vimalaa unakku
kalantha anpaakik kasinthu ul urukum
nalanthaan ilaatha siriyētku nalki
nilanthan mēl vantharuli neel kallalkal kaaddi
naayit-kadaiyaaik kidantha adiyētkuth

thaayit-sirantha thayaavaana thaththuvanē
maasatra sōthi malarntha malarchudarē
thēsanē thēnaar amuthē sivapuranē
paasamaam pattraruthup paarikkum aariyanē
nēsa arul purinthu nenchil vanchang-kedap

pēraathu nindra perung-karunaip-pēraarē
aaraa amuthē alavilaap pemmaanē
ōraathaar ul-laththul olikkum oliyaanē
neeraai urukki en aaruyiraai nindraanē
inpamum thunpamum illaanē ullaanē

anparukku anpanē yaavaiyumaai allaiyumaam
sōthiyanē thun irulē thōnraap-perumaiyanē
aathianē antham naduvaaki allaanē
eerththu ennai aadkonda enthaip perumaanē
koorththa mengnanaththaal kondunarvaar tham-karuththin

nōkkariya nōkkē nunukkariya nunnunarvē
pōkkum varavum punarvum illaap punniyanē
kaakkum em kaavalanē kaanpariya pēroliyē
aattrinpa vellamē aththaamikkaai nindra
thōtrach-sudar oliyaai sollaatha nunnunarvaai

maatramaam vaiyakaththin vevvērē vantharivaam
thētranē thētrath-thelivē en sinthanaiyul
ootraana unnaar amuthē udaiyaanē
vētru vikaara vidakkudampin udkidappa
aatrēn em aiyaa aranē O' endru endru

pōtrip pukallnthu irunthu poi keddu meiyaanaar
meeddinku vanthu vinaippiravi saaraamē
kallap pulakkurampai kaddallikka vallaanē
nal irulil naddam payinradum naathanē
thillaiyul kooththanē thenpaandi naaddaanē

allal piravi aruppaanē O' endru
sollatku-ariyaanai sollith thiruvadikeell
solliya paaddin porul unarnthu solluvaar
selvar sivapuraththin ullaar Sivan adikkeell
pallōrum ēthappanninthu

*Thiruchitrampalam*

# தென்னாட்டு நிகழ்வுகள்


மனோன்மணியம்மைக்கு ஆடிப்பூர நன்னாள் சிறப்பு வழிபாடு (22-07-2023)


தாயுமானவர் சுவாமி திருக்கோயிலில் சனிக்கழுவாய் வழிபாடு (15-07-2023)




ஆனித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (03-07-2023)




சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை (26-07-2023)


ஒளியகம் ந. ஒளியரசு ஐயா குழுவினர் தென்னாட்டில் வழிபாடு (19-07-2023)




நயினாதீவில் தெய்வத்தமிழில் புதுமனைப் புகுவிழா (06-07-2023)



தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து ஐந்தாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 16ம் நாள் நிறைமதி அன்று (01-08-2023 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org